Price Rs. 20.00

ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

10.12.2008 - மலர் 05, இதழ் 40

## ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்



13/12/08
Saturday



## கண் தானம் செய்வதை அறிமுகப்படுத்திய இலங்கை




## அச்சுக் கலையின் பரிணாம வளர்ச்சி

விலை ரூபா 12/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் இலங்கை யானை இனம்



இலங்கை யானைகள் இலங்கைக்கே உரிய யானை இனம் என்பது அநேகருக்குத் தெரியாத விடயம். இலங்கை யானைகள் ஆசிய யானைகளைப் போன்றவை என்று பலரும் கருதுகின்றனர். உண்மை என்னவெனில், இலங்கையில் காணப்படும் யானை இனத்தை உலகின் வேறு எந்தப்பகுதியிலும் காண முடியாது. இலங்கையிலிருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்ட யானைகள் வேண்டுமானால் வெளிநாடுகளில் காணப்படலாம். இலங்கையிலுள்ள யானைகள் இலங்கைக்கே உரிய உள்நாட்டு யானை இனமாகும். முன்னைய நாட்களில் இலங்கை யானைகள் நாட்டின் சகல பகுதிகளிலும் வாழ்ந்தன. ஆனால், தற்காலத்தில் யானைகள் அருகி வருகின்றன.



தற்போது, காடுகளில் மிகச் சிறிய அளவிலான யானைகளே காணப்படுகின்றன.

இன்றைய காலப்பகுதியில் யானைகளைப் பார்க்க வேண்டுமானால் பின்னவல, யால தேசிய பூங்கா, வில்பத்து தேசிய பூங்கா, மதுறு ஓயா தேசிய பூங்கா, உடவளவ தேசிய பூங்கா போன்ற இடங்களுக்கே செல்லவேண்டும். தாவர உண்ணியான யானை இனம் புல், இலை குழைகள், மரப்பட்டைகள், விளாம் பழம், பனை ஓலை என்பவற்றை உண்ணும். அத்துடன், திப்பிலிக் கன்று இதற்கு மிகவும் பிடித்த உணவாகும். ஆண் யானையொன்றுக்கு நாளாந்தம் 200 கிலோ வரையான உணவு தேவைப்படும்.

இலங்கையில் யானைகள் மிக வேகமாக அருகி வரும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளன. பல்வேறு காரணங்களுக்காக யானைகள் கொல்லப்படுவதே இதற்குக் காரணமாகும். முக்கிய ஒரு காரணம் தந்த விற்பனைக்காக யானைகள் கொல்லப்படுவதாகும். இதனால், காடுகளில் தந்தங்கள் உள்ள யானைகளைக் காண்பது மிக அரிதாக இருக்கின்றது.

மற்றுமொரு அச்சுறுத்தல் என்னவெனில், பயிர்ச்செய்கைகள் மற்றும் வீடுகளை பாதுகாத்துக் கொள்வதற்காக யானைகள் கொல்லப்படுவதாகும். ஏனைய காரணங்களாவன காடழிப்பு, வறட்சி, பட்டினி என்பனவாகும். அத்துடன், வறட்சியான காலங்களில்



அநேகமான யானைகள் கிராமங்களுக்குள் ஊடுருவி உணவுக்காக விவசாய பயிர் நிலங்களை நாசம் செய்வதால் அவை கொல்லப்படுகின்றன.

இலங்கைக்கே உரிய இலங்கை யானை இனம் நாட்டின் செல்வங்களாகும். இவற்றைப் பாதுகாப்பதோடு இனப்பெருக்கத்தை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம். யானைகள் தெய்வாம்சம் பொருந்தியவை என்னும் நம்பிக்கையும் நிலவுவதால் அவை கொல்லப்படுவது நாட்டுக்கு நல்லதல்ல என்ற கருத்தும் நிலவுகிறது.


## விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

.............................. ..............................
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653


# போட்டோகொப்பி இயந்திரம்

1937 ஆம் ஆண்டு அமெரிக்க சட்டக் கல்லூரி மாணவரான செஸ்டர் கார்ல்சன், ஒரு மின்சார உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனத்தின் காப்புரிமை விஷயங்களைக் கவனிக்கும் அலுவலராக வேலைக்குச் சேர்ந்தார். இவர் தனது நிறுவனத்தின் கண்டு



பிடிப்புக்களையும் புதிய திட்டங்களையும் காப்புரிமை அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக ஒரே விஷயத்தின் பல்வேறு நகல்களை உருவாக்க வேண்டியிருந்தது. அந்த நகல்களை கார்ல்சனே தனது கைப்பட எழுதினார். அவர் கிட்டப் பார்வை மற்றும் மூட்டுவலியாலும் அவதிப்பட்டார். எனவே, தனது கஷ்டத்தைக் குறைக்க மாற்று வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நினைத்தார்.

அதனால், அவர் தனக்கு நேரம் கிடைத்த போதெல்லாம் தனது வீட்டு சமையலறையில் அமர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டார். அப்போது, சில பொருட்கள் வெளிச்சத்தில் காட்டப்படும்போது அவை தமது மின்னியல் தன்மையை மாற்றிக் கொள்வதைக் கண்டார். அது 'ஒளிக்கடத்தல் தன்மை' எனப்பட்டது. பல்லாண்டு கால ஆராய்ச்சிக்குப் பின் அவர் 1942 ஆம் ஆண்டு ஒரு நகலெடுக்கும் தொழில்நுட்பத்தை கண்டு பிடித்துப் பதிவு செய்தார். அதற்கு 'எலக்ட்ரிக் போட்டோ கிராபி' என்று அவர் பெயர் சூட்டினார்.

அதன்பின் 21 ஆண்டுகள் கழிந்தபின்னர் கார்ல்சனின் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு ஓர் இயந்திரத்தைத்



தயாரிக்க ஒரு நிறுவனம் முன்வந்தது. ஐ.பி.எம், ஜி.இ, ஆர்.சி.ஏ போன்ற பிரபல நிறுவனங்கள் கார்ல்சனின் தொழில் நுட்பத்தை ஏற்க மறுத்துவிட்டன. இறுதியாகத்தான் 1960 ஆம் ஆண்டில் 'ஹலாய்டு' நிறுவனம் அவரது யோசனையை ஏற்றது.

அந்த நிறுவனம் பின்னர் 'ஜெராக்ஸ்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஜெராக்ஸ் என்ற அப்பெயரே பரவலாகிவிட்டதால் 'போட்டோ கிராபி' என்ற உண்மையான பெயருக்குப் பதிலாக 'ஜெராக்ஸ்' என்பதே பிரபலமாகியது.




## பாடசாலை மாணவர்களுக்கான ஊடக சங்கம்

விண்ணப்பங்களை அனுப்பி விட்டீர்களா?

தேசிய கல்வி நிறுவகம் - 'விஜய்' இணைந்து நடத்துகின்ற பாடசாலை மாணவர்களுக்கான ஊடக சங்கத்தில் இணைவதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுக் கொண்டிருக்கின்றன.
நீங்கள் இன்னமும் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பவில்லையாயின் விரைவாக அனுப்பி வையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு...

தொ.பே இல - 5383653 அல்லது சுயமுகவரியிடப்பட்டு, முத்திரை ஒட்டிய நீள் கடித உறையொன்றை அனுப்பி விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி: 'ஊடக சங்கம்' விஜய், த.பெ.எண் 2037 கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# ஜனவரியிலிருந்து தரம்-8 இற்கு புதிய பாடத்திட்டம் அறிமுகம்

எதிர்வரும் வருடம் புதிய கல்வி ஆண்டின் ஆரம்பத்துடன் தரம்- 8 இல் கல்வி பயிலவுள்ள மாணவர்களுக்கு கல்வி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் புதிய பாடத்திட்டத்தினை அறிமுகம் செய்ய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்படி, புதிய பாடத்திட்ட அறிமுகத்தினூடாக மாணவர்களின் செயற்பாட்டு கல்வித் தகைமைகளும் விருத்தி செய்யப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஆண்டில் தரம் 7 மற்றும் தரம் 11 ஆகிய வகுப்புக்களுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, கடந்த ஆண்டில் தரம் 6 மற்றும் தரம் 10 ஆகிய வகுப்புகளின் பாடத்திட்டங்களும் மாற்றியமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இதற்கேற்ப, ஆசிரியர்கள் புதிய பாடத்திட்ட கற்பித்தல் நடவடிக்கைகளை சிரமமின்றி மேற்கொள்வதற்குத் தேவையான பயிற்சித் திட்டங்களை கல்வி அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. ஆசிரியர்களுக்குத் தேவையான ஆசிரியர் வழிகாட்டல்களையும் மாணவர்களுக்குத் தேவையான புதிய பாடப்புத்தகங்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 2009 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைத் துணி விநியோகம்

எதிர்வரும் கல்வி ஆண்டுக்காக பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ள பாடசாலை சீருடைத் துணிகளை சகல கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சு இதற்காக 126 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் இதனூடாக 10.4 மில்லியன் மீற்றர் சீருடைத் துணிகளை விநியோகம் செய்யக்கூடியதாக இருப்பதாகவும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## 1,728 பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, 1,728 பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு முன்னெடுத்து வருவதாக பிரதிக் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தெரிவான 1,728 பட்டதாரிகளுக்கு இவ்வருட இறுதிக்குள் நேர்முகப் பரீட்சைகளை நடத்தி, மேற்படி பட்டதாரி ஆசிரிய நியமனங்களை வழங்கவுள்ளதாகவும் 628 சிங்கள மொழிமூல பட்டதாரி ஆசிரியர்களும் 669 தமிழ்மொழி மூல பட்டதாரி ஆசிரியர்களும் 431 ஆங்கில மொழி மூல பட்டதாரி ஆசிரியர்களும் மேற்படி நியமனத்தைப் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விஜய் வழங்கும் அறிவுசார் போட்டி!

உங்கள் திறமைக்கு ஒரு சவால்...

### போட்டி விபரங்கள்

டிசம்பர் மாதம் முழுவதும் வெளிவருகின்ற 'விஜய்' இதழ்களில் பலதரப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்ட பொது அறிவுக் கேள்விகள் ஒவ்வொரு இதழிலும் தலா ஐந்து கேள்விகள் வீதம் வழங்கப்படும். கேள்விகளுக்கு அருகே வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையின் கீழ் கோடிட வேண்டும். இதன்படி ஐந்து வாரங்களைக் கொண்ட டிசம்பர் மாதத்தில் மொத்தமாக 25 கேள்விகள் கேட்கப்பட்டிருக்கும். இந்த கேள்விகளில் கூடிய அளவில் சரியான விடைகளை அடையாளப்படுத்தியோர் வரிசைப்படுத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

ஐந்து வாரங்களும் பகுதி பகுதியாக கேள்விகள் வழங்கப்படுகின்றமையால் ஐந்து பகுதிக் கேள்விகளையும் பகுதி - 1, 2, 3, 4, 5 என சேகரித்து அவற்றிற்கான விடைகளை எழுதி அவற்றை ஒட்டு மொத்தமாக எமக்கு தபாலில் அனுப்பவும். தபாலிட வேண்டிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

### பரிசுகள் ஏராளம்

| | |
|---|---|
| கல்குலேட்டர்கள் | 05 |
| விலையுயர்ந்த பேனாக்கள் | 15 |
| கீடெக்குகள் (Key Tag) | 15 |








இன்னும் பல ஆறுதல் பரிசுகளும் உண்டு

### இந்த வாரத்திற்கான கேள்விகள் பகுதி - 02

06. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
*(வொலிபோள், கிரிக்கெட், கபடி)*

07. முதலாவது உலக மகா யுத்தம் எத்தனையாம் ஆண்டில் ஆரம்பமாகியது?
*(1930, 1914, 1940)*

08. பரதத்தில் சிவலிங்கத்தைக் குறிக்கும் முத்திரைகள் எவை?
*(அராளம்-அர்த்தபதாகம், பதாகம்-சிகரம், மயூரம்-திரிபதாகம்)*

09. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
*(இளங்கோ அடிகள், திருத்தக்கதேவர், சீத்தலைச் சாத்தனார்)*

10. மருத்துவத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
*(சோக்ரடீஸ், பிளேட்டோ, ஹிபோக்ரடிஸ்)*

மிகுதி கேள்விகளை அடுத்தடுத்த இதழ்களில் எதிர்பாருங்கள்.

டிசம்பர் மாத இதழ்களை இன்றே பதிவு செய்யுங்கள்

## மணிக்கு பல அங்குலங்கள் வளர்ந்திடும் தாவரம்



உலகில் அதிக வளர்ச்சி வேகமுள்ள தாவர இனமாக மூங்கில் தாவரத்தைக் குறிப்பிடலாம். மூங்கிலில் 1000 இற்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. அவை நிலவும் காலநிலை மற்றும் மண்ணின் தன்மைகளைப் பொறுத்து ஒவ்வொரு நாட்டிலும் வளர்கின்றன. சாதாரணமாக மூங்கில் தாவரமானது நாளொன்றுக்கு 3-4 அடி (மணிக்கு 1.5 அல்லது 2 அங்குலம்) வரையில் வளர்வதோடு, சில மூங்கில் வகைகள் மூன்று மாதங்களுக்குள் 30 மீற்றர் உயரத்துக்கு வளர்கின்றன. இந்த மூங்கில் தாவரத்தின் வளர்ச்சி வேகமானது கடிகார முள் ஒரு நிமிடத்திற்கு அசைவதை சார்ந்திருப்பதாக அண்மைய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன், இந்த மூங்கில் 250 அடி உயரம் வரை வளரக்கூடியது.



கிழக்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மூங்கில் தாவரத்துக்கு முக்கிய இடமுண்டு. இப்பிரதேசங்களில் அது அதிகமாக வளர்வதால் அம்மக்களின் வாழ்க்கையில் வர்த்தகப் பயிராகவும் மூலிகைத் தாவரமாகவும் அலங்காரப் பொருளாகவும் இன்னும் பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்ற தாவரமாக மூங்கில் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்வாய்ந்த பொலிஸ் சேவை ஸ்கொட்லன்ட் யார்ட்




ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் என உலகம் முழுவதும் பிரபலமான லண்டன் பொலிஸ் குறித்து எமது நாட்டிலும் கூட அடிக்கடி பேசப்படுவதுண்டு. புகழ்பூத்த 'ஷர்லொக் ஹோம்ஸ்' எனும் கதை மூலம் ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் சேவையானது நம்மில் பலருக்கு மிக நெருக்கமான அறிமுகத்தை ஏற்படுத்தியது. அக்கதையில் வரும் ஷர்லொக் ஹோமின் மனதைக் கவர்ந்த பாத்திரத்தை பிரதிபலித்ததே இந்த ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ்தான்.

இந்த ஸ்கொட்லன்ட் யார்ட் பற்றி சில அடிப்படைத் தகவல்கள் தெரிந்தாலும் அதனைப் பற்றி சில விளக்கமான தகவல்களை இந்த கட்டுரை மூலம் அறிந்து கொள்வோம்.

இன்று நியூ ஸ்கொட்லன்ட் யார்ட் (New Scotland Yard) என அழைக்கப்படும் இந்த பொலிஸ் சேவை, த யார்ட் (The Yard) என்றும் அழைக்கப்படுவதோடு, பிரித்தானியாவின் மெட்ரோ-பொலிடன் பொலிஸ் சேவையின் (Metropolitan Police Service) தலைமை அலுவலகமும் ஆகும்.

பிரித்தானிய நாடாளுமன்றத்திலிருந்து 450 மீற்றர் தூரத்தில் வெஸ்ட்மினிஸ்டரில் விக்டோரியா மற்றும் புரோட்வே (Victoria-Broadway) வீதிகளுக்கருகில் இருபது மாடிக்

**ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் சேவையானது உலகமய புகழ்வாய்ந்த கலாசாரத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றது. அது குற்றவியலுடன் தொடர்பான செயற்பாடுகளில் தலைமை தாங்கிச் செயற்படுகின்றது**

கட்டடத்தில் நியூ ஸ்கொட்லன்ட் பொலிஸ் சேவை நடைபெறுகிறது.

வைட்ஹோல் (White Hall) எனும் இடத்தில் அமைந்துள்ள அதன் தலைமைக் கட்டடத்திற்கு 1829 செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது. 1967 இல் அது இன்று செயல்படும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன் தலைமைக் காரியாலயம் அமைந்த பிரதேசம் காரணமாகவே ஸ்கொட்லன்ட் யார்ட் எனும் பெயர் இதற்கு வந்தது. இப்பெயர் வருவதற்குரிய காரணங்கள் குறித்து பல வாய்மொழிக் கருத்துக்கள் நிலவினாலும் பழைமை வாய்ந்த ஸ்கொட்லாந்து அரசின் தூதுவர் அலுவலகம் இயங்கிய இடம் இது என்பதே இப்பெயர் வருவதற்குரிய முக்கிய காரணமெனக் கருதப்படுகிறது.அதுபோலவே ஸ்கொட்லாந்து மன்னனும் அரசியும் அங்கு வரும் சந்தர்ப்பங்களில் தங்கும் இடமாகவும் இந்நிலையம் விளங்கியதாகவும் வாய்மொழிக் கருத்துக்கள்



நிலவுகின்றன. அத்துடன், பிரபுக்கள் வரும்பொழுது அவர்களின் குதிரைகள் நிறுத்தப்படும் நிலையமாக இது இருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

1829 செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி சேர்.ரொபர்ட் பீல் மற்றும் பிரர் கொயின் எயூஜின் விடொக் ஆகியோர் மெட்ரோ பொலீடன் பொலிஸ் சேவையையும் அதோடு இணைந்த ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் சேவையையும் ஆரம்பித்ததோடு அக்காலத்தில் இரு ஆணையாளர்களைக் கொண்ட அவர்களின் செயலகம் அங்கு சேவை செய்துள்ளது. அச்சேவையை செவ்வனே கொண்டு நடத்த 50 அறைகளைக் கொண்ட கட்டடம் ஒன்று இருந்ததாகவும் கூறப்படுகின்றது. உள்ளக பாதுகாப்பு கட்டமைப்பு, பொதுமக்கள் செயல்பாடு, நிர்வாகச் செயல்பாடு உள்ளிட்ட மேலும் பல சேவைகள் அதன் மூலம் நிறைவேற்றப்பட்டதோடு காலம் செல்லச் செல்ல அவர்களின் சேவை உயர்வடைந்தமையால் அவர்கள் மீது சுமத்தப்பட்ட பொறுப்புக்களும் அதிகரித்தன. அதனாலேயே 1829 இல் 1000 அதிகாரிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் 1890 இல் 13000 உத்தியோகத்தர்களுடன் தனது சேவையை நடத்தியுள்ளது.

1960 இல் புதிய தொழில்நுட்பத்தின் தேவையும் உத்தியோகத்தர்களின் அவசியமும் மென்மேலும் உணரப்பட்டதோடு ஆரம்பகால ஸ்கொட்லன்ட் யார்ட் கட்டடம் பின்னர் பிரித்தானிய இராணுவத்திடம் இருந்ததோடு 1973 இல் அயர்லாந்து கெரில்லாப் போராளியின் குண்டுத்தாக்குதலுக்கும் இலக்காகியது.

ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் சேவையில் குற்றவியல் விபரக்கோவை நிலையத்தை Home Office Large Major Enquiry System என்றே அழைக்கின்றனர். இச்சொற்றொடர்களின் ஆரம்ப எழுத்துக்களை இணைத்து HOLMES என்ற பெயர் வைத்து அதனை நிர்மாணித்துள்ளனர். மக்களின் மனதைக் கொள்ளை கொண்ட ஷர்லொக்ஹோமின் பாத்திரத்திற்கு கௌரவம் அளிக்கும் பொருட்டு இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் அந்நிறுவனத்தின் தொலைபேசி இலக்கம் 1212 ஆகும். இன்றும் கூட அந்நிறுவனத்தின் தொலைபேசி இலக்கத்தின் இறுதியில் 1212 எனும் இலக்கம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் சேவையானது உலகமய புகழ்வாய்ந்த



கலாசாரத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றது. அது குற்றவியலுடன் தொடர்பான செயற்பாடுகளில் தலைமை தாங்கிச் செயற்படுகின்றது. அதில் சேர்.ஆர்த்தர் கொனென் டொயில் அவர்களின் ஷர்லொக் ஹோம்ஸின் பாத்திரம் மிக முக்கியமானதாகும். அத்துடன், பல நாவலாசிரியர்கள் தமது படைப்புக்களில் வீரனாக அல்லது வீராங்கனையாக சித்தரித்து ஸ்கொட்லன்ட் யார்ட் இரகசிய உளவுப் பிரிவினரைப் பயன்படுத்தியுள்ளனர்.

## பெருந்தொகையான சேவையாளர்கள்

மெட்ரோபொலிடன் பொலிஸ் சேவையானது ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் சேவை வரலாற்றில் ஓர் உன்னத நாமத்தைப் பெற்றுக் கொண்டது.

லண்டன் மாநகரிலும் அதன் ஆட்சி நிர்வாகப் பிரிவிற்கு உட்பட்ட விசாலமான பிரதேசத்திலும் பொலிஸ் சேவையாக இதுவே திகழ்கின்றது. இன்று 31141 உத்தியோகத்தர்களும் 13661 பொலிஸ் செயற்குழுவினரும் உள்ளனர். அத்தோடு, வாகனப் பரிபாலகர்கள் 414 பேரும் பொலிஸ் உதவி அதிகாரிகள் 2100 பேரும் சேவை புரிவதாக கூறப்படுகின்றது.

இவை தவிர,ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் சேவையினர் 620 சதுர மைல் பிரதேசத்தையும் 7.2 மில்லியன் மக்களையும் தமது பாதுகாப்பு பிரதேசத்திற்குள் உள்வாங்கி பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

-இரஞ்சித் ஜெயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிரகங்களுக்கு இடையிலுள்ள சிறு கிரகங்கள்



**இரவு வேளைகளில் எமக்கு வானில் சந்திரனையும் நட்சத்திரங்களையும் கிரகங்களையும் காணமுடியும். எனினும், எமது வெறும் கண்களுக்குப் புலப்படாத எத்தனையோ விண்பொருட்கள் விண்வெளியில் உள்ளன. எமது வெறுமையான கண்களுக்குப் புலப்படாத அத்தகைய விண்பொருட்களில் ஒன்றுதான் சிறு கிரகங்கள் அல்லது சிறு கோள்கள் ஆகும். இன்று நாம் அத்தகைய சிறு கோள்கள் குறித்த தகவல்களைப் பார்ப்போம்.**



சிறு கிரகமொன்று கோளுடன் மோதும் விதம்

## சிறு கிரகங்கள் (Asteroids)

வியாழன், சனி முதலிய அதி விசாலமான கோள்களைப் போன்றே சிறிய விண்பொருட்களும் ஞாயிற்றுத்தொகுதியில் உள்ளன. அத்தகைய சிறிய விண்பொருட்களில் இந்த சிறு கிரகங்களும் அடங்கும். அளவில் சற்றுச் சிறிய இச்சிறு கிரகங்கள் பொதுவாக கோள்களைப் போன்று கோளவடிவத்தில் காணப்படும். இவை அடிக்கடி ஒன்றுடன் ஒன்று மோதுவதால் சிறிய துண்டுகளாக உடைந்துவிடும்.

## சிறு கிரகங்கள் கண்டுபிடிப்பு


கி.பி 1801 ஆம் ஆண்டு விண்பொருள் ஆய்வுக்குழுவொன்றினால் முதன்முதலாக சிறு கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. செவ்வாய் மற்றும் வியாழன் போன்ற கோள்களுக்கு மத்தியில் வேறு ஏதும் கோள்கள் இருக்கின்றனவா? என அனுமானித்து, அது சம்பந்தமாக தீவிர ஆய்வில் ஈடுபட்ட பொழுதுதான் அவர்களுக்கு 'செரெஸ்' எனும் சிறு கிரகத்தைக் கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்தது. அதன் அகலம் சுமார் 1000 கிலோ மீற்றராகும்.

## இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிறு கிரகங்கள்

1802-1807 ஆம் ஆண்டுகளில் விண்வெளி ஆய்வாளர்களால் சிறிய மூன்று விண்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் வாயுக்கள் இல்லை என்றும் அவை வால் நட்சத்திரங்களும் இல்லை என்றும் மாறாக, அவை சிறு கிரகங்கள் என்றும் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தினர்.

1890 ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 300 சிறு கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இன்றளவில் பல சிறு கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. அவற்றை இலகுவாக இனங்காணும் பொருட்டு அனைத்து சிறு கிரகங்களுக்கும் இலக்கங்கள் இடப்பட்டுள்ளன. சில சிறு கிரகங்களுக்கு கிரேக்க தேவதைகளினது பெயர்களும் வேறு சிலவற்றிற்கு வானவியலாளர்களின் பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன.

ஹபல்' தொலைக்காட்டியூடாக பெறப்பட்ட சிறு கிரகங்களின் படம்




## சிறு கிரகங்களின் வகைகள்

வானவியலாளர்கள் இவற்றை மூன்று பிரதான வகைகளாகப் பிரித்துள்ளனர். அவையாவன:
(1) C வகை (2) S வகை (3) M வகை என்பனவாகும்.

C வகை - இவை சிறு கிரக வளையத்திற்கு வெளிப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. சிறு கிரகங்களில் 75% ஆனவை இந்த வகையைச் சார்ந்தவையே.

S வகை - இத்தகையவற்றில் இரும்பு, மெக்னீசியம் முதலிய உலோகப் பொருட்கள் அடங்கியுள்ளன. இவை சிறு கிரக வளையத்தின் உட்புற பிரதேசத்தில் அமைந்துள்ளன. இவற்றில் 17% மானவை S வகையைச் சார்ந்தவை.

M வகை - இத்தகைய சிறு கிரகங்களில் அதிகமாக இரும்பு எனும் கனியமே நிறைந்து காணப்படுகின்றது. இவை சிறுகிரக வளையத்தின் மத்திய பகுதிகளில் அமைந்துள்ளன. இவை சிறு கிரகங்களின் மொத்த தொகையில் 8% மாத்திரமே.

## சிறு கிரகங்களைத் தேடிச்சென்ற கலிலியோ விண்வெளி ஓடம்

இந்த சிறுகிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து வானவியலாளர்கள் அவற்றில் அடங்கியுள்ளவை தொடர்பில் ஆய் வுகளை மேற்கொள்வதில் அதிக கவனத்தைச் செலுத்தினர். 1991ஆம் ஆண்டு வரை சிறு கிரகங்கள் குறித்து புவியில் இருந்தபடியே ஆய்வினை மேற்கொண்டனர். பின்னர் 1991ஆம் ஆண்டு 'கலிலியோ' எனும் விண்வெளி ஓடத்தை 'கெஸ்ப்ரா' (Gaspra) என பெயரிடப்பட்ட சிறு கிரகத்தை நோக்கி அனுப்பினர். அதனைத் தொடர்ந்து 1993இல் கலிலியோ விண்வெளி ஓடத்தை 'ஐடா' (Ida) எனப் பெயரிடப்பட்டுள்ள சிறு கிரகத்திற்கு சமீபமாக ஆய்வுகளைமேற்கொள்ளப் பயன்படுத்தினர். (இன்னும் சில விபரங்கள் அடுத்தவாரம்)

**-இரஞ்சித் ஜெயகர்**

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குறுகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523,0817 918 981
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னல் தாக்குதலில் இரு
# பாதுகாப்புப் பெற தயாரா

இயற்கை அனர்த்தங்களில் மின்னல் தாக்குதலினால் ஏற்படும் பாதிப்புகள் அனேகம். மின்னல் தாக்குதலினால் ஏற்படும் பாதிப்புகள் வருடாந்தம் அதிகரித்து வருகின்றன. அதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் அவதானம் செலுத்துவது அவசியமாகிறது. பாதிப்பு ஏற்படும் இக்காலப்பகுதியில் அவதானமாக செயற்படுவதன் ஊடாக மின்னல் பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

''மகனே, தொலைக்காட்சி பார்ப்பதை நிறுத்துங்கள். ஒரே மின்னலாக இருக்கின்றது அல்லவா? 'கார்ட்டூன்' நிகழ்ச்சியை பின்னர் பார்க்கலாம். மின்னல் தாக்கினால் டிவி பழுதடைந்து விடும். அன்டெனாவின் வயரையும் கழற்றி விடுங்கள்''

''ஐயோ அம்மா. இந்தக் 'கார்ட்டூன்' நிகழ்ச்சியை மட்டும் பார்த்து விட்டு டிவியை நிறுத்தி விடுகின்றேன்.

''வேண்டாம் மகனே. மின்னலின் பாதிப்பு குறித்து ரேடியோவிலும் டிவியிலும் அடிக்கடி சொல்கின்றார்கள் தானே. தெரிந்து கொண்டே பிரச்சினைகளை சந்திக்கக் கூடாதல்லவா?''


## மின்னல் என்றால் என்ன?

கனமான முகில் கூட்டங்களுக்கு இடையில் ஏற்படும் மின்பரிமாற்றங்கள் காற்று மண்டலத்தின் ஊடாக புவியை அடைவதனையே 'மின்னல்' என்று கூறமுடியும்.

## மின்னல் எம்மைத் தாக்கும் விதம்



முகில்களில் இருந்து தாழ்ந்து வரும் மின்னலால் நேரடியாக ஏற்படும் தாக்குதல்.



மரங்கள், கம்பி என்பனவற்றின் ஊடாக மின்னல் பயணிக்கும்போது அதன் அருகில் இருக்கும் பொருள் மற்றும் மனிதரிடம் ஏற்படும் தாக்குதல்.



புவிக்கு மின்னல் வந்த இடத்திலிருந்து தரை மேற்பகுதிக்கு கடத்தியின் ஊடாக ஏற்படும் தாக்குதல்.



புவியில் மின்னல் பயணிக்கும் மரம் கம்பி கட்டடத்தினை தொடுவதன் ஊடாக இடம்பெறும் மின்னல் தாக்குதல்.



கனமான முகில் கூட்டம்




## மின்னல் உருவாவது இப்படித்தான்

மின்னல் உருவாவதற்கு காரணம் வெப்பமான நிலையற்ற ஈரலிப்புக் கொண்ட காற்று மண்டல சூழலில் உருவாகும் கனமான முகில் கூட்டங்களாகும். இந்த முகில் கூட்டங்களில் ஏற்படும் உள்ளகச் செயற்பாடுகளினால் மின் பரிமாற்றங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு ஏற்படும் பல மின் பரிமாற்றங்களே மின்னலாக உருவெடுக்கின்றன.

## மின்னல் உருவாகும் மூன்று வழிகள்

★ புவி மின்னல்-முகில்களின் தாழ் பகுதியில் இருந்து புவிக்கான மின் அழுத்தம்.

★ முகில் மின்னல்-முகில்களுக்கிடையில் ஏற்படும் மின்மாற்றம்.

★ முகில்களுக்கும் காற்று வெளிக்கும் இடையிலான பரிமாற்றம்



## மார்ச், ஏப்ரல், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் மின்னல் தாக்குதல் ஏன் அதிகரிக்கிறது?


இலங்கையில் மின்னலின் பாதிப்பு மார்ச், ஏப்ரல், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் அதிகமாகும். மின்னலை உருவாக்கும் கனமான முகில்கூட்டங்கள் இந்த காலப்பகுதியிலேயே உருவாகின்றன. கனமான முகில்கள் உருவாகத் தேவையான வெப்பநிலை, ஈரலிப்புத் தன்மை கொண்ட காற்று மண்டலம் என்பனவும் இக்காலப்பகுதியில் உருவாகின்றன

## ஆபத்தைக் கொண்டு வரும் புவி மின்னல்

எமக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவது இந்த வகை மின்னலாகும். இந்த வகை மின்னலின் மின் அளவு 25000 அம்பியர் அளவு கொண்டதாக விளங்குகின்றது. அத்துடன், 100 மில்லியன் வோல்ட் அளவு கொண்டதாகும். மின்னலின் சக்தி 500 மில்லியன் யூலாகும். இவ்வாறான மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகள் அளப்பரியனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந்து வோம்!



45° க்குட்பட்ட பிரதேசங்களில் மின்னல் தாக்கம் குறைவு

## உங்களுக்குத் தெரியுமா?

இலங்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திய 'சுனாமி', வெள்ளப்பெருக்கு போன்ற பிரச்சினைகளின் போது பெரும் பாதிப்பை எதிர்நோக்கியது சிறு பிள்ளைகளும், பெண்களும், வயோதிபர்களும், அங்கவீனர்களும், நோயாளிகளுமாவர். இவர்களில் பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்களே பாதிக்கப்பட்டனர். அதனால், பாடசாலை செல்லும் மாணவ மாணவியரான நீங்களும் அனர்த்த முகாமைத்துவம் குறித்து அறிந்து கொள்ளவும். அனர்த்தங்களில் இருந்து விலகியிருக்கவும் உங்களுக்கு பொறுப்பும் உரிமையும் உள்ளது.



## மின்னல் பாதிப்பிலிருந்து மீளுவோம்

மின்னல் பாதிப்பினால் இலங்கைக்கு ஏற்படும் உயிர் உடைமை பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இதனால், மின்னல் பாதிப்பிலிருந்து மீள்வதற்கு நாம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பல உள்ளன. உங்களுக்கு இடிச்சத்தம் கேட்டால் நீங்கள் மின்னல் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதியில் இருக்கின்றீர்கள் என்று பொருள் கொள்ளவேண்டும். அவ்வாறாயின்,

* வெட்டவெளிகளில் நிற்காமல் உடனடியாக பாதுகாப்பான இடத்தை நோக்கிச் செல்லுங்கள். வெளிப்பயணங்களைத் தவிர்த்து விடுங்கள்.
* நன்கு மூடப்பட்ட கட்டடம் அல்லது வாகனம் பாதுகாப்பானதாகும்.
* விளையாட்டு மைதானங்கள், தேயிலைத் தோட்டங்கள், வயல்வெளிகள், வெட்டவெளியான இடங்கள் என்பனவற்றில் நடமாடுவதனைத் தவிர்த்து விடுங்கள்.
* கோடரி, அலவாங்கு போன்ற ஆயுதங்களுடன் வெட்டவெளிகளில் நடமாடுவதனைத் தவிர்த்து விடுங்கள்.
* தனி மரங்களின் கீழ் அல்லது கூட்டாக இருக்கும் மரங்களின் கீழ் நிற்பதனைத் தவிர்த்து விடுங்கள்.
* உயரமான மலை முகடுகளில் நிற்பதைத் தவிர்த்து விடுங்கள்.
* கம்பி வழி தொலைபேசி பாவனையைத் தவிர்த்து விடுங்கள்.
* வானொலி-தொலைக்காட்சி உபகரணங்களின் மின் தொடர் வயர்களைக் கழற்றி விடுங்கள். மின் உபகரணங்களைப் பயன்படுத்தாதீர்கள்.

## நீங்கள் வெட்டவெளியில் இருக்கின்றீர்களா?

* மரங்கள், கம்பி வேலிகள், தூண்கள் இல்லாத பகுதிகளுக்கு சென்று விடுங்கள்.
* படகில் இருப்பின் தாழ்ந்திருங்கள். நீந்திக் கொண்டு கடற்கரையோரம் இருக்கின்றீர்களாயின் உடனடியாக அங்கிருந்து அகன்று விடுங்கள்.

## வீட்டைச் சூழவுள்ள பகுதி மின்னல் பாதிப்புக்குள்ளாகின்றதா?

* வீட்டிற்கு அண்மையில் இருக்கும் தென்னை மரத்தினை வெட்டி அகற்றி விடுங்கள்.
* மின்னல் தாங்கியைப் பொருத்துங்கள்.
* வீட்டுக்கு அண்மையில் உள்ள மரங்களை கம்பிகளினால் இணைக்காதீர்கள்.

## மின்னல் பாதிப்புக்குள்ளானால்

மின்னல் தாக்கியவர்களை தொடுவதும் உதவி செய்வதும் ஆபத்தானதல்ல. பாதிக்கப்பட்டவர் இருப்பின் உடனடியாக முதலுதவி செய்யுங்கள். செயற்கைச் சுவாசம் கொடுங்கள். உடலைத் தடவுங்கள். அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

விசேட அனுசரணை:

PRACTICAL ACTION
Intermediate Technology Development Group

ப்றக்டிக்கல் எக்சன்
இல. 5, லயனல் எதிரிசிங்க மாவத்தை கொழும்பு-5.
தொலைபேசி: 011 2829412 பெக்ஸ்: 011 2856188
மின்னஞ்சல்: Sri Lanka@practicalaction.org.lk
இணையதளம்: www.janathakshan.net
www.practicalaction.org

இயற்கை அனர்த்தம் ஒன்றினை சந்தித்த போது நீங்களோ அல்லது உங்களைச் சேர்ந்த நபரோ முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்து மிகச் சுருக்கமாக 50-100 சொற்களில் எமக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கத்தை எழுதி அனுப்புவோருக்கு பெறுமதியான புத்தகப் பொதி ஒன்று பரிசாக வழங்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி :

அனர்த்தங்களைத் தவிர்ப்போம்
ப்றக்டிக்கல் எக்ஷன், இல 5,
லயனல் எதிரிசிங்க மாவத்தை,
கொழும்பு-05.

# கண்டி இராசதானி கால கலைகள்



இலங்கையில் மன்னராட்சி நிலவிய காலப்பகுதிகளில் ஒவ்வொரு மன்னர் காலத்திலும் தனித்தனியான கலைகள் வளர்ச்சியடைந்துள்ளன. அதிலும் கண்டிய காலத்து கலைகள், அனுராதபுர கால கலைகளில் தனிச் சிறப்புக்களைக் காணமுடிகின்றது.

மலைநாட்டு ஆட்சிக்காலப் பகுதியில் அநுராதபுர இராசதானியில் இருந்து ஆரம்பமாகிய பௌத்த கலைப்பாரம்பரியங்கள் பொலன்னறுவை யுகத்தில் சற்று பின்னடைவைச் சந்தித்திருந்ததை அவதானிக்கலாம். இக்கலைகள் கம்பளை மற்றும் தம்பதெனிய காலப்பகுதியில் மிகவும் சிறந்த முறையில் வளர்ச்சி கண்டிருந்தவைகளாகும்.

1505 ஆம் ஆண்டு இலங்கை முதலாவது ஐரோப்பிய படையெடுப்பாகக் கருதப்படும் போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. கரையோரப் பிரதேசங்களே அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தவையாகும். பின்னர் முறையே 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் ஆட்சியின் கீழும் 1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழும் இலங்கை நிர்வகிக்கப்பட்டது.



இப்படையெடுப்புக்கள் காரணமாக இலங்கையின் உள்ளூர் அரசியல் நிலவரத்திலும் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்த கலை, கலாசார பாரம்பரியங்களிலும் வீழ்ச்சி காணலாயிற்று.

கி.பி 1592 இல் கண்டியை ஆட்சி செய்த முதலாவது விமலதர்மசூரிய மன்னனின் ஆட்சியில் கலைகள் புத்துயிர் அளிக்கப்பட்டு மீண்டும் கட்டியெழுப்பப்படுவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. கி.பி 1747 இல் கண்டியை ஆட்சி செய்த கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் ஆட்சியின் கீழ் இக்கலைகள் மிகவும் சிறந்தமுறையில் வளர்ச்சி கண்டன.

ஓவியம், சிற்பம், செதுக்கல் ஆகிய கலைகள் சிறந்த முறையில் ஊக்குவிக்கப்பட்டதால் அவை பரந்தளவில் வளர்ச்சி கண்டன. இத்துறையில் ஈடுபட்ட கலைஞர்களுக்கு அரச மட்டத்தில் ஊக்கமளிக்கப்பட்டதோடு கௌரவிப்புக்களும் வழங்கப்பட்டன.

இதனால், கண்டிய யுகத்திற்கே உரித்தான புதிய கலைகள் வளரலாயிற்று. இந்த யுகத்திற்குரிய ஓவியக்கலையிலும் சிற்பக் கலையிலும் புதுமையான அம்சங்களை அவதானிக்க முடியும். சிலவகையான சித்திரங்களும் ஓவியங்களும் முழுமையாக கோடுகளால் நிரப்பப்பட்டிருந்தமை கண்டிய கலை முறையில் தனித்துவமாகக் கருதப்பட்டது.



தெவரகம்பொல சில்வா, கொஸ்வத்தே சித்தரா, நிலகம பட்டபெந்தி ஆகிய ஓவியர்கள் கண்டிய யுகத்தில் கலைத்துறையில் அளப்பரிய சேவையாற்றிய கலைஞர்களாகக் கருதப்பட்டனர்.

அத்தோடு சிற்பக்கலை, கட்டடக் கலை, மரவேலைப்பாடு, பித்தளை, உலோகத்தில் செதுக்கும் சிற்ப வேலைப்பாடு, துணியில் ஓவியம் வரையும் கலை, மட்பாண்ட அலங்கார வேலைப்பாடு ஆகிய துறைகளும் கண்டிய யுகத்தில் பிரபல்யம் பெற்ற கலைகளாக இருந்தன.

இன்றும்கூட யடிநுவர, உடதும்பரை, தவ்லகலை, பிலிமதலாவைப் பகுதிகளில் இக்கலைகள் பரம்பரைத் தொழிலாக சில கலைஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் காணலாம். விசேடமாக பித்தளையில் அலங்கார வடிவங்கள் வடிக்கப்பட்டு முக்கியமான ஒரு வருமானம் ஈட்டும் துறையாக இருந்து வருவதை அப்பகுதிகளில் காணலாம்.

**அமீர் ஹுஸைசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கு செல்லும் வாகனம் குறித்து அவதானம் கொள்வோம்

பஸ்ஸினுள் இருந்த இடைவெளியினுள் விழுந்து ஒரு மாணவி இறந்த செய்தியொன்று அண்மையில் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. மலர்களைப் போன்று மென்மையான சிறுவர், சிறுமியர் இவ்வாறு அநியாயமான மரணங்களுக்கு முகம் கொடுப்பது என்பது மனதுக்குப் பெரும் வேதனையளிக்கும் சம்பவங்களாகும். அதனால், இவ்வாறான சம்பவங்கள் இனியும் நடைபெறாமல் இருப்பதற்கு நாம் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். பாடசாலை போக்குவரத்து வாகனங்களிலும் பஸ்களிலும் பயணிக்கும் மாணவ மாணவியரின் பாதுகாப்புக் குறித்தும் அது தொடர்பிலான சட்டதிட்டங்கள் குறித்தும் ஆராய்வோம்.

## பாடசாலை வேன் குறித்த சுற்றுநிருபம்

பாடசாலை வேன்களில் பயணிக்கும் மாணவ மாணவியரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்ட பொலிஸ் திணைக்களம் பொலிஸ் மா அதிபரின் கையொப்பத்துடன் 2007.07.26 அன்று சுற்றுநிருபம் ஒன்றினை வெளியிட்டுள்ளது. அந்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களாவன:

* அந்தந்தப் பிரதேசத்தின் பாடசாலை மாணவ மாணவியரை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் பற்றி அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் ஓர் ஆவணத்தைப் பேணுதல் வேண்டும்.
* பாடசாலை வேனின் சாரதி மற்றும் உரிமையாளரின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அந்த வாகனத்தில் பயணிக்கும் பிள்ளைகளின் தகவல்களும் அந்த ஆவணத்திற்குள் உள்ளடங்க வேண்டும்.
* அனைத்துப் பாடசாலை வேன்களிலும் பெண் பாதுகாவலர் ஒருவர் இருக்கவேண்டும். அந்த பெண் பாதுகாவலரின் தகவல்களும் மேற்கூறப்பட்ட ஆவணத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டும்.
* பாடசாலை வேனின் உரிமையாளரின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் தெளிவாகத் தெரியும் வகையில் வாகனத்தின் பின்புறக் கண்ணாடியில் பொறிக்க ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.
* குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கம் மற்றும் குறியீட்டு இலக்கத்தினை குறிப்பிடும் 'ஸ்டிக்கர்' பாடசாலை வேனின் முன் பகுதியிலோ அல்லது பின்பகுதியிலோ ஒட்டப்பட்ட வேண்டும்.
* எந்தவொரு பாடசாலை வேனின் கண்ணாடிகளையும் கறுப்பு நிறமாக்க அனுமதிக்கக்கூடாது.
* பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளினால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தமது பகுதியைச் சேர்ந்த பாடசாலை வேன்களின் சாரதிகள் மற்றும் உரிமையாளர்களை கூட்டி தேவையான பாதுகாப்பு ஆலோசனைகளை வழங்க வேண்டும். அத்துடன், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட வேண்டும்.
* செலுத்துவதற்குப் பொருத்தமற்ற சரியான தரமற்ற பாடசாலை வேன்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
* பாடசாலை வேன்கள் நிறுத்தப்படும் இடங்களுக்கு அப்பால் தனியார் பாடசாலை வேன்களை நிறுத்தி வைக்க அனுமதி அளிக்கப்படக் கூடாது.
* பாடசாலை வேன்கள் நிறுத்தி வைக்கப்படும் இடங்களில் அடிக்கடி சோதனைகள் இடம்பெற வேண்டும்.
* பாடசாலை வேன்களுக்குள் நடைபெறும் அனைத்து விதமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்தவுடன் அதுபற்றி சிறுவர் பெண்கள் செயலகப் பணிப்பாளருக்கு தொலைபேசி மூலம் அறிவிக்க வேண்டும்.

### சிசு செரிய எனும் போக்குவரத்து சேவை

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பாடசாலை மாணவர்களுக்கென பஸ் சேவையொன்று நடத்தப்படுகின்றது. இதனை 'சிசு செரிய' என்ற பெயரில் அழைக்கின்றனர். பாடசாலை மாணவர்கள் உடல் உள உளைச்சல் இன்றிக் குறித்த நேரத்திற்கு பாடசாலைக்கு சென்று மீண்டும் வீடு திரும்புவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதே இந்த பஸ் சேவையின் நோக்கமாகும்.







* இந்த பஸ்களில் பாடசாலை சீருடை அணிந்த மாணவ மாணவியர் மட்டுமே பயணிக்கலாம். (ஆசிரியர்களும் பயணம் செய்யலாம்)
* இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் மட்டுமன்றி தனியார் பஸ்களும் 'சிசு செரிய' பஸ் சேவையில் இணைந்துள்ளன. இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்களில் பருவச்சீட்டுகளாகவும் 50 சதவீத கட்டணக் குறைவாகவும் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. தனியார் பஸ்களில் கட்டணங்களில் 50 சதவீதம் மட்டுமே அறவிடப்படுகின்றது.
* இந்த சேவையில் ஈடுபடும் பஸ்களின் தரம் குறித்து போக்குவரத்து ஆணைக்குழுவினால் பரீட்சித்துப் பார்க்கப்படும்.
* 'பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்' என்று மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பெயர்ப்பலகை பஸ்ஸின் முன்பகுதியில் வைக்கப்பட்டிருக்கும். (இந்த பெயர்ப்பலகை பொருத்தப்பட்டுள்ள பஸ்களுக்கு முன்னுரிமை வழங்கி விசேட அவதானத்தையும் செலுத்துமாறு போக்குவரத்து ஆணைக்குழுவும் பொலிஸ் திணைக்களமும் போரிக்கை விடுத்துள்ளன)

### ஆலோசனைகளைக் கவனத்திற் கொள்ளுங்கள்

* பாதசாரிக்கான கடவைகளையே எப்பொழுதும் பயன்படுத்துங்கள்.
* பாதசாரிக்கான தனிப்பாதைகள் இல்லாவிட்டால் எப்பொழுதும் பாதையின் வலது பக்கத்தில் பயணம் செய்யுங்கள்.
* வீதியைக் கடக்க பாலங்கள் இருப்பின் வீதிகளைக் கடக்க பாலங்களையே பயன்படுத்துங்கள்.
* சுரங்கப்பாதை இருப்பின் அதில் பயணியுங்கள்.
* பச்சை நிற சமிக்ஞை விழுந்தவுடன் சாரதிகளுக்குத் தெரியும் விதத்தில் கைகளை உயர்த்திக் காட்டி வாகனத்தை நிறுத்தி விட்டுப் பாதையைக் கடக்கவும்.
* வீதியைக் கடக்கும்போது பாதுகாப்பு நடைமுறைகள் இல்லாவிடின் முன்னர் குறிப்பிட்டது போன்று வீதியின் இரு மருங்கிலும் பார்த்துவிட்டு கவனமாகக் கடக்கவும்.
* வலது பக்கம் பாருங்கள்.
* இடது பக்கம் பாருங்கள்.
* மீண்டும் வலது பக்கம் பாருங்கள்.
* வீதியில் வாகனங்கள் இல்லாவிடின் விரைவாகக் கடந்து விடுங்கள்.














### இவற்றை செய்யாதீர்கள்

* வீதியின் மருங்கில் இருக்கும் வேலிகளின் மீது ஏறி வீதியினைக் கடப்பதனைத் தவிர்த்து விடுங்கள்.
* வீதியில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களுக்கு முன்னால் அல்லது பின்னால் சென்று வீதியினைக் கடப்பதனைத் தவிர்த்து விடுங்கள்.
* வீதிகளுக்கு அண்மையில் விளையாடுவதனை தவிர்த்து விடுங்கள்.
* வாகனங்கள் பயணிக்கும்போது அவற்றில் நுழைந்து வீதியினைக் கடக்க முயற்சிக்காதீர்கள்.
* பஸ்ஸில் ஏறவும் இறங்கவும் பஸ் தரிப்பிடங்களை மட்டும் பயன்படுத்துங்கள்.
* பஸ்களில் முண்டியடித்து ஏறுவதனை தவிர்த்து விடுங்கள்.
* பஸ்களில் உள்ள பிடியினை நன்கு பிடித்துக் கொள்ளுங்கள்.
* பஸ் ஆசனத்தில் அமரும்போது முன் ஆசனப் பிடியினை நன்கு பிடித்துக் கொள்ளுங்கள்.
* பஸ்ஸினுள் குழப்படி செய்யாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்லாமிய வருடக் கணக்கில் இது துல்ஹஜ் மாதம். இதுவே வருடத்தின் கடைசி மாதமும் கூட. இம்மாதம் உலகுவாழ் முஸ்லிம்களுக்கு மிகவும் சிறப்பானதொரு மாதமாகும். காரணம், இம்மாதத்தின் பத்தாவது பிறையில் அனைத்து முஸ்லிம்களும் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடி மகிழ்கின்றமையாகும்.**



# தியாகம் போற்றும் ஹஜ்ஜுப் பெருநாள்

அல்லாஹ்வின் கட்டளைப்படி இறை அடியார்கள் 'ஹஜ்' கடமையை நிறைவேற்றியதையடுத்து இப்பெருநாள் கொண்டாடப்படுவதனால் 'ஹஜ்ஜுப் பெருநாள்' என்றும் இஸ்லாமிய விதிமுறைகளுக்குட்பட்டபடி இறைவனுக்காக 'உழ்ஹிய்யா' எனும் ஆடு/மாடு/ஒட்டகம் அறுத்துப் பகிர்ந்தளிக்கப்படுவதனால் 'ஈதுல் அழ்ஹா' என்றும் இத்தினம் அழைக்கப்படுகின்றது. மேலும், இவ்விரு வணக்க வழிபாடுகளும் இறை நம்பிக்கையாளர்களின் தியாக உள்ளத்தை வெளிப்படுத்தி நிற்பதால் இப்பெருநாள் தினம் 'தியாகத் திருநாள்' என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், ஹஜ்ஜுப் பெருநாள் நமக்குப் பிரதானமாக இரு நபிமார்களின் வரலாறுகளை நினைவில் நிறுத்துகின்றது. ஒருவர் நபி இப்றாஹீம் (அலை) அவர்கள். அடுத்தது அவர்களின் மகன் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களாவார். இவர்களின் தியாகங்களை நினைவுகூரு முகமாகவே இம்மாதத்தில் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே, அவர்களின் அந்தத் தியாகங்களை சற்று மீட்டிப் பார்ப்போம்.



திருமணமாகி பல வருடங்கள் கழிந்த நிலையில், பிள்ளைப் பேறின்றிப் பரிதவித்த நபி இப்றாஹீம் (அலை) அவர்களுக்கும் அவர்களின் துணைவியார் ஹாஜரா அம்மையாருக்கும் மகனாக நபி இஸ்மாயீல் அவர்கள் பிறந்தார். சில தினங்களில் அல்லாஹ்வின் உத்தரவின்படி, ஹாஜரா அம்மையாரும் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களும் பாலைவனத்தில் தனித்து விடப்படுகிறார்கள். பாலைவனத்தில் தனித்து விடப்படும் அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகளை, இறைவன் மீது கொண்ட அளவற்ற பக்தியினால் அவற்றைப் பொருட்படுத்தாது, அதற்காக இறைவனிடமே பிரார்த்தனை செய்து வெற்றி கொண்டார்கள். இதனை ஞாபகப்படுத்தும் சில கடமைகளும் ஹஜ் யாத்திரையின்போது யாத்திரிகர்களால் நிறைவேற்றப்படுகின்றன.


அவ்வாறே, அல்லாஹ்வின் கட்டளைப்படி, நபி இப்றாஹீம் (அலை) தனது அருமை மகனான நபி இஸ்மாயீல் (அலை) அவர்களை பலியிடத் துணிந்ததோடு,



**ஹஜ் தினத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் இறைவனுக்கான அர்ப்பணிப்பையும் பக்தியையும் நம்முள் விதைப்பதாகவே அமைகின்றது**

அப்போது, அல்லாஹுத்தஆலா அங்கு ஓர் ஆட்டை அனுப்பியதால் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களுக்குப் பதிலாக அந்த ஆடு பலியிடப்பட்டது. இந்த தியாகத்தை நினைவுபடுத்தும் முகமாகவே அல்லாஹ் மறுமை நாள் வரை வசதி படைத்த முஸ்லிம்களுக்கு 'உழ்ஹிய்யா' கொடுப்பதை கடமையாக்கினான். உழ்ஹிய்யா கொடுக்கும் நாட்கள் துல்ஹஜ் மாதம் 10 ஆம் பிறை ஸுபாஹ் முதல் 13 ஆம் பிறை அஸர் வரையாகும். அதிலும் பெருநாள் தொழுகை முடிந்ததும் கொடுப்பது மிகவும் சிறந்தது. அர்ப்பணிப்புகளில் சாலச் சிறந்தது உழ்ஹிய்யாவாகும். சொந்தக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இது பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

அத்துடன், இம்மாதத்தில் ஹஜ் யாத்திரையை மேற்கொள்ளாத ஏனைய முஸ்லிம் அடியார்கள் இந்த ஹஜ் பெருநாள் தினத்தில் பள்ளிவாசலுக்குச் சென்று பெருநாள் தொழுகையை நிறைவேற்றி விட்டு, வீணாக அன்றைய தினத்தைக் கழிக்காமல் நபி இப்றாஹீம் (அலை), நபி இஸ்மாயீல் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மனதில் நிலைநிறுத்தி, அவற்றை இயன்றளவு பின்பற்ற வேண்டும்.



இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் தொழுகையும் நோன்பும் உடலால் செய்யப்படுகின்ற வணக்கமாக இருக்கின்றது. ஸகாத் பொருளால் செய்யப்படுகின்ற வணக்கமாக இருக்கின்றது. ஆனால், ஹஜ் மாத்திரமே உடலாலும் பொருளாலும் இணைந்தவாறு செய்யப்படுகின்ற கடமையாக இருக்கின்றது. ஆகவே, அல்லாஹ்வின் கட்டளைப்படி அனைத்துக் கடமைகளையும் முறையே நிறைவேற்றும் ஒவ்வொரு முஸ்லிமினதும் பெரிய எதிர்பார்ப்பு தனது வாழ்நாட்களில் ஒரு தடவையாவது துல்ஹஜ் மாதத்தில் ஹஜ் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதாகும்.

வசதி படைத்தவர்கள் உழ்ஹிய்யா கொடுக்க வேண்டும். ஏழைகளுக்கு உதவுவதோடு, உற்றார், உறவினர்களுடன் பரஸ்பர அன்பைப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

அத்துடன், ஹஜ் தினத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் இறைவனுக்கான அர்ப்பணிப்பையும் பக்தியையும் நம்முள் விதைப்பதாகவே அமைகின்றது. இறைவழியில் நாம் செய்யும் அர்ப்பணிப்புக்களால் இழப்புகள் ஏற்படுவதில்லை. மாறாக, நன்மைகளும் வெற்றிகளுமே கிட்டுகின்றன என்பதை ஹஜ் காலா காலமாக உறுதிப்படுத்தி வந்துள்ளமை அதன் மகத்துவத்தை நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

அனைவருக்கும்
'ஈத் முபாரக்'

-எஃப்.என்.கௌஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மலாவி

## நிலையம்

தென் ஆபிரிக்க பிரதேச நாடுகளில் ஒன்றாகிய மலாவி ஒரு குடியரசு நாடாகும். நாற்புறமும் நிலப்பரப்பால் சூழப்பட்ட மலாவியின் கிழக்கு எல்லையில் மலாவி ஏரி பரந்துள்ளது. இதன் சிறிய பகுதி மொஸாம்பிக் நாட்டிற்குச் சொந்தமானதாகும். இதன் தென் எல்லையில் பாதிக்கு மேல் மொஸாம்பிக்கும் மேற்கில் செம்பியாவும் வடக்கு மற்றும் கிழக்கு எல்லைகளில் தன்சானியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. முற்காலத்தில் 'நேசலாந்து' என அழைக்கப்பட்ட மலாவி, மிக ஏழ்மையான நாடுகளில் ஒன்று. 3 மாகாணங்களாகவும் 28 மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தலைநகர் | : லிலோங்வே |
| பெரிய நகரம் | : ப்ளேன்டயர் |
| அரச கரும மொழி | : ஆங்கிலம், ச்சிச்செவா, யாவ், லோம்வே |
| அரசு | : ஒரு சட்டசபையைக் கொண்ட பல கட்சிக் குடியரசு |
| முழு நிலப்பரப்பு | : 118,484 சதுர கிலோமீற்றர். (இதில் 20.6% நன்னீர்த் தேக்கமாகும்) |
| உத்தேச சனத்தொகை (2008) | : 13,931,831 |
| நாணயம் | : குவாச்சா |
| காலம் | : கிரீன்வீச் நேரத்தைவிட 2 மணி நேரம் முன்பதாக |
| இணையத்தளக் குறியீடு | : .mw |
| சர்வதேச தொலைபேசி இலக்கம் | : +265 |



## காலநிலையும் மக்களும்

மலாவி நாட்டின் தாழ்நிலப் பிரதேசங்களில் மிக வெப்பமான காலநிலை நிலவுகின்றது. அதே நேரம், உயர்ந்த பிரதேசங்களில் மத்தியதரைக் காலநிலை நிலவுகின்றது. நாட்டின் பல இடங்களில் ஆங்காங்கே உயர் நிலங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

செவா, நயாயன்ஜா, தும்புகோ, யாஓ,லொம்வே,செனா,டொன்கா, நிகோனி, நிகோன்டே மற்றும் ஆசியர், ஐரோப்பியர் என பல இன மக்கள் வாழும் பூமியாக மலாவி திகழ்கின்றது. இவர்கள் மத்தியில் பிரதான மதமாக ரோமன் கத்தோலிக்க மதம் விளங்குகின்றது.தவிர, இஸ்லாமியர்களும் வேறு மத நம்பிக்கையாளர்களும் சிறிய அளவில் காணப்படுகின்றனர்.




## வரலாறு

தொல்பொருள் ஆய்வுச் சான்றுகளின்படி, கி.மு 8000 முதல் கி.மு 2000 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக இன்றைய மலாவி பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்தது உறுதியாகின்றது. கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கும் கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில்'பண்டு' மொழி பேசும் மக்கள் கூட்டத்தினர் மலாவி நோக்கி இடம்பெயர்ந்தனர்.

அதன்பின் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் நாட்டினுள் அடிமை வியாபாரம் மிக அதிகமாக நடைபெற்றதோடு, இஸ்லாமியர்கள் நாட்டைக் கைப்பற்றினார்கள். இக்காலகட்டத்தில் கிறிஸ்தவ மறைப்பரப்பாளர்கள் இப்பிரதேசத்தில் பெருமளவில் வருகை தந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்பினர். அதன்பின் இப்பிரதேசத்தில் பிரதான அரசுகள் பல உருவாகி நிலைபெற்றன.

ஐரோப்பாவின் புகழ்பெற்ற தேச சஞ்சாரியான டேவிட் லிவிங்ஸ்டன் 1850 மற்றும் 1860 காலகட்டத்திற்கு இடைப்பட்ட காலத்திலேயே முதன்முதலாக இப்பிரதேசத்திற்கு வருகை தந்தார். சிசில் ரோட்ஸின் பிரித்தானிய-தென் ஆபிரிக்க சங்கம் 1884 இல் மலாவி நாட்டை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை ஏற்றது. இதேவேளை, 1887 க்கும் 1889 க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் பிரித்தானிய-தென் ஆபிரிக்க சங்கத்திற்கும் அரேபிய அடிமை வியாபாரிகளுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. 1891 இல் பிரித்தானியா 'நேசலாந்து' எனும் அரசை மலாவியுடன் இணைத்து 1892இல் அதனை பிரித்தானிய பாதுகாப்பு வலயமாக மாற்றியது. அதனை அடுத்து, அப்பிரதேசத்தில் இருந்து அடிமை வியாபாரிகள் வெளியேற்றப்பட்டனர். பின்னர் 1951 க்கும் 1953 க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரித்தானியா மற்றும் நேசலாந்துப் பிரதேசங்கள் வட மற்றும் தென் ரொடீஷியா குடியேற்றங்களுடன் ஒன்றிணைந்தன. 1964 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி நேசலாந்து 'மலாவி' எனும் பெயரில் சுயாதீன தனி அரசாக உருவானது. அதன்பின் இரண்டு வருட காலங்களுக்குள் மலாவி நாடு குடியரசாக மலர்ந்தது. 'ஹெஸ்டிங்ஸ் கே பெண்டா' அந்நாட்டின் முதலாவது பிரதமராக தெரிவுசெய்யப்பட்டார்.

## பொருளாதாரம்

உலகில் மிகக் குறைந்தளவு அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஒன்றாக மலாவி காணப்படுகின்றது. மலாவி நாட்டின் மக்களில் பெரும்பான்மையினர் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். அவர்களின் பிரதான பயிர்ச்செய்கையாக சோளம், பருத்தி, நெல், நிலக்கடலை, மரவள்ளி, கிழங்கு, புகையிலை, தேயிலை முதலியன விளங்குகின்றன. விலங்கு வேளாண்மையில் கோழி வளர்ப்பு, ஆடு,மாடு மற்றும் பன்றி வளர்ப்பில் ஈடுபடுதல், சிறியளவில் மீன்பிடித்தொழில் என்பன அம்மக்களின் பொருளாதார நடவடிக்கைகளாக இருக்கின்றன.





கைவினைப் பொருட்கள், உணவு, பானவகைகள், மரத்தளபாடம், புடைவை, சிறிய கட்டடப் பொருட்கள் என்பன சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. நாட்டினுள் ஒரு போதும் எண்ணெய் உற்பத்தி செய்யப்படாதபோதும் அவர்களின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக எண்ணெய் திகழ்கின்றது.



மலாவியின் முக்கிய ஏற்றுமதி-இறக்குமதி சகாக்களாக தென் ஆபிரிக்கா, அமெரிக்கா, ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், மொஸாம்பிக், இந்தியா, சிம்பாப்வே, செம்பியா மற்றும் தன்சானியா ஆகிய நாடுகள் விளங்குகின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடி வந்து கடிக்கும் நுளம்பு






நாம் எங்கிருந்தாலும் நம்மைத் தேடி வந்து இலவசமாக ஊசி போடுவது நுளம்புகள்தான். வெளிச்சம் இருக்கும் போது தான் நுளம்புக்கடி என்று பார்த்தால் இருட்டில்கூட அவை நம்மை விட்டு வைப்பதில்லை. இருட்டிலும் அவை நம்மைத் தேடி வந்து கடிப்பதை வைத்து நுளம்புக்கு பார்வைப் புலன் அதிகம் என்று நினைத்து விடாதீர்கள். மாறாக, நாம் வெளிச்சுவாசத்தின்போது வெளிவிடும் 'காபனீரொட்சைட்' மற்றும் மனித உடலிலிருந்து வெளியாகும் வியர்வையிலும் சுவாசத்திலும் கலந்திருக்கும் 'ஒக்டினோல்' எனும் ரசாயன பதார்த்தம் என்பனவற்றுடன் இன்னும் சில வாசனைகளை வைத்தே அவை நம்மை அடையாளம் காண்கின்றன. இதனால், நாம் 50 அடி தொலைவில் இருந்தாலும் நுளம்புகள் நம்மை இனங்கண்டு கொள்ளக்கூடியன. அதிகமானோர் ஒன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கும்போதும் அங்குள்ள சிலரை மட்டுமே அவை திரும்பத் திரும்பக் கடிப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். சிலரின் வாசனைகளை மட்டும் அவை விரும்புகின்றமையே இதற்கு மூலகாரணமாகும்.



ஒரு நுளம்பு தனது அளவைப் போன்று மூன்று மடங்களவு இரத்தத்தை ஒருவரது உடலிலிருந்து உறிஞ்சிக் கொள்ளும். அவ்வாறு ஒருமுறை உறிஞ்சிக் கொள்ளும் இரத்தமானது குறித்த நுளம்புக்கு ஒரு வாரத்துக்குப் போதுமானது.

அத்துடன், நுளம்புகளில் பெண் நுளம்புதான் மனிதர்களைக் கடிக்கின்றது. அதன் தாடைக்குக் கீழுள்ள 'மெக்ஸிலரி பல்ப்' (Maxillary Palp) என்ற உறுப்புத்தான் மனிதர்களை மோப்பம் பிடிப்பதற்கு உதவும் மோப்ப உறுப்பாக இருக்கின்றது. இந்த நுண்ணிய உணர்வு இழைகள் மூன்று வித நரம்புக் கலன்களுடன் இணைந்துள்ளன. ஆகவே, நுளம்புகளின் இந்த மோப்ப உறுப்பினை செயலிழக்கச் செய்வதற்கு ஏற்ற ரசாயன நுளம்புக் கொல்லியைக் கண்டுபிடிப்பதன் மூலம் நுளம்புக்கடியைத் தவிர்க்கலாம் என விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

-ஜீனு

## 2008 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



மாத்தளை, புனித தோமையர் பெண்கள் பாடசாலையில் கல்வி கற்கும் பாத்திமா ஷஹ்னாஸ் நவாஸ், 147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதோடு, பாடசாலையில் தமிழ்ப் பிரிவில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் ஏழாவது இடத்தையும் பெற்றுள்ளார். இவர் மாத்தளையைச் சேர்ந்த திலீப் நவாஸ்-பாத்திமா சியானா தம்பதியினரின் புதல்வியாவார்.



களு/அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எம்.ஏ.எஃப்.அஃப்ரா, 126 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதோடு, பாடசாலையில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார். இவர் எம்.எஸ்.எம்.அஸ்கர்-பாத்திமா ரினோஸா தம்பதியரின் புதல்வியாவார்.



தெஹிகம, அல்-இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தின் மாணவரான முஹம்மட் நிசாட், 126 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் தெஹியங்கையைச் சேர்ந்த நவ்பர்-கைருன்நிஸா தம்பதியரின் புதல்வராவார்.



க/ஜப்பார் மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் எம்.எஸ்.நுஸ்ரா பானு, 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதோடு, கண்டி மாவட்ட தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கிடையே மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார். இவர் கலகெதரையைச் சேர்ந்த ஏ.எச்.எம்.சாஜஹான்-ஏ.எச்.நூர்ஜஹான் தம்பதியரின் புதல்வியாவார்.




களு/அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.ஆர்.எஃப்.றிஸ்லா, 126 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் பண்டாரகமையைச் சேர்ந்த மொஹம்மட் றிஸான்-பாத்திமா றோதனி தம்பதியரின் புதல்வியாவார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானப் பிறப்பிடமா




இற்றைக்கு சுமார் 2000 வருடங்களுக்கு முன் கிரேக்க நாகரிகம் முடிவுக்கு வந்தது. கிரேக்க நாடு ரோமப் பேரரசின் ஒரு பகுதியாகக் கொண்டு வரப்பட்டதே இம்முடிவுக்குக் காரணமாகும். எனினும், கிரேக்கர்களின் அரசியல், தத்துவங்கள், வாஸ்து விஞ்ஞானம், மொழி மற்றும் இலக்கியம் என பல்வேறு துறைகளானது ரோம கலாசாரத்தில் பெருமளவு தாக்கங்களை ஏற்படுத்தின. அத்தாக்கத்தின் பிரதிபலிப்புகளை இன்றும் நாம் காணலாம். இன்று உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் மொழி, கலை, விஞ்ஞானம் சம்பந்தமாக நிலவும் கருத்துக்களின் மூல பிறப்பிடமாக விளங்குவது புராதன கிரேக்கம்தான் என்றால் அது மிகையாகாது.



## அறிவை விரும்பியவர்கள்

புராதன கிரேக்கத்தில் சிரேஷ்ட அறிஞர்கள், புத்திஜீவிகள், சிறந்த ஆசிரியர்கள் என பலதரப்பட்ட அறிவியலாளர்கள் இருந்தனர். ஆரம்ப யுகத்தில் அவர்கள் உயிரினங்கள் குறித்து எழுந்த பல்வேறு வினாக்களுக்கு விடை அளித்தனர். இவ் விடைகளுக்கு அடிப்படையாக அமைந்தது கிரேக்க கடவுள்கள் குறித்த பல்வேறு கதைகளாகும்.

- பிற்காலத்தில் உலகத்தை அறிவு பூர்வமாகவும் தர்க்கரீதியாகவும் பார்ப்பதற்கும் விஞ்ஞானத்தை அடிப்படையாக வைத்துக் கருத்துக்களை முன்வைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்த புத்திஜீவிகள் 'அறிவை விரும்புவோர்' அல்லது 'அறிவுக்கு ஆதரவு வழங்குவோர்' என புராதன காலத்தில் அழைக்கப்பட்டனர். வாழ்க்கையின் சகல விடயங்களையும் அர்த்தமுள்ளதாக சிந்திக்கும் ஆற்றல் அவர்களிடம் இருந்தது.









## அன்றாட வாழ்க்கையை கலைத்துவத்துடன் சித்தரித்தனர்

அன்றாட வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளை கலை நுணுக்கங்களுடன் அழகிய மலர்ச்சாடிகளில் சித்தரிப்பது கிரேக்க நாகரிகக் கலையின் உன்னத நிலையாகக் கருதப்படுகிறது. அன்றாட வாழ்க்கையின் நிகழ்வுகளும் கிரேக்க வாய்மொழிக்கதைகளும் மலர்ச்சாடிகளில் கலைப்படைப்புகளாக உருவாக்கப்பட்டன. தற்போது கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களும் மேற்படி மலர்ச்சாடிகளிலும் மட்பாத்திரங்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ள படங்களும் கலை நுணுக்கச் செதுக்கல்களும் கிரேக்கர்களின் வாழ்க்கை முறைகள் குறித்து தெளிவான எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.



## டைனோஸ் கடவுளுக்கான கிரேக்க நாடகம்

புராதன கிரேக்கர்களின் வாழ்க்கையில் மிக முக்கிய அங்கங்களாக நாடகங்களும் விளையாட்டுக்களும் திகழ்கின்றன. அக்காலத்தில் கிரேக்க நாடகங்கள் டைனோஸ் கடவுளுக்காக அர்ப்பணிக்கப்படுவதாகக் கருதப்பட்டது. ஆடல்-பாடல்களால் நிறைந்த இந்நாடகங்களில் 'கோரஸ்' என அழைக்கப்படும் ஆண் நாடகக் கலைஞர்களே நடித்தனர். ஆரம்பத்தில் சந்தைகளுக்கு மத்தியில் இந்நாடகங்கள் நடந்தேறினாலும் பின்னர் கிரேக்க நாடெங்கிலும் அமைக்கப்பட்ட திறந்தவெளி நாடக அரங்குகளில் இந்நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம், கலைத் துறைகளின்
# ான கிரேக்க நாகரிகம்





விளையாட்டுக்களை வெறும் பொழுதுபோக்கு அம்சமாக கிரேக்கர்கள் நோக்கவில்லை. யுத்தங்களில் ஈடுபடும்போது நோயற்ற, ஆரோக்கியமானவர்களாகவும் பலசாலிகளாகவும் இருப்பதற்காக அவர்கள் விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கினர்

## ஆண்களுக்கென்று வரையறுக்கப்பட்ட நாடகக்கலை

கிரேக்க நாடகங்களில் ஆண்கள் மட்டுமே நடித்தனர். அவர்கள் தமது முகத்தின் அளவை விட விசாலமான முகமூடிகளையும் ஆடை, அணிகளையும் அணிந்து கொண்டு நடித்ததோடு, தமது நடிப்பினை தீ[illegible]மயாக வெளிப்படுத்தியதன் மூலம் ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தனர். துயரம், மகிழ்ச்சி, ஆண்-பெண் தன்மைகள், இளமை, முதுமை வேறுபாடுகளை இந்த முகமூடிகள் மூலம் பிரதிபலித்தனர்.

உலக வரலாற்றில் முதன்முதலாக நாடக அரங்குகளை அமைத்த பெருமை கிரேக்கர்களையே சாரும். இந்த திறந்த நாடக அரங்குகளில் 18,000 பேர்கள் நாடகங்களைக் கண்டுகளிக்கும் வசதிகள் காணப்பட்டன.

## விளையாட்டிற்கும் முக்கிய இடம்

விளையாட்டுக்களை வெறும் பொழுதுபோக்கு அம்சமாக கிரேக்கர்கள் நோக்கவில்லை. யுத்தங்களில் ஈடுபடும்போது நோயற்ற, ஆரோக்கியமானவர்களாகவும் பலசாலிகளாகவும் இருப்பதற்காக அவர்கள் விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கினர். பிரதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. அவ்விளையாட்டுப் போட்டிகளில் மிகவும் பழைமையானதும் புகழ் பெற்றதுமான விளையாட்டு விழாதான் 'ஒலிம்பிக் விளையாட்டு' விழாவாகும்.

## அலங்காரமான உறுதியான தூண்கள் நிர்மாணம்

கிரேக்கர்கள் தமது பிரசித்திபெற்ற கட்டடங்கள், வழிபாட்டுத்தலங்கள், தேவாலயங்கள் என்பனவற்றை அழகியதும் உறுதியானதுமான தூண்களைப் பயன்படுத்தியே நிர்மாணித்தனர். அதற்காக அவர்கள் மூவகையான தூண் வகைகளைப் பயன்படுத்தினர். அவற்றில் 'டோரிக் மற்றும் 'அயனிக்' ஆகிய இருவகையான தூண் வகைகளை அதிகம் பயன்படுத்தினர். மூன்றாவதாக பல நுட்பங்கள் நிறைந்த 'கொரின்தியன்' எனும் தூண் அமைப்பு முறையை ரோம பேரரசுக் குட்பட்ட யுகத்தில் பயன்படுத்தினர்.

## சுயஸ் கடவுளுக்காக ஒலிம்பிக்

ஆரம்ப காலத்தில் ஒலிம்பிக் விளையாட்டு விழாவானது நான்கு வருடங்களுக்கு ஒருமுறை 'சுயஸ்' தெய்வத்தைக் கௌரவிக்கும் பொருட்டு தொடர்ந்து 5 நாட்களுக்கு ஒலிம்பியாவில் நடத்தப்பட்டது. இந்த 5 தினங்களும் கிரேக்க நகர அரசுகளிடையே ஒற்றுமை நிலவியது. ஒன்றோடொன்று மோதிக்கொண்ட இவ் அனைத்து அரசுகளிடையேயும் குறித்த தினங்களுக்காக வேண்டி சமாதான ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன.

ஒலிம்பிக் விழாவிற்காக வருகை தரும் விளையாட்டு வீரர்களுக்கு ஆபத்துக்களோ, விபத்துக்களோ ஏற்படாத வகையில் போட்டிகளில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. ஒலிம்பிக் விளையாட்டிற்காக விளையாட்டு வீரர்கள் பல மாதங்களுக்கு முன்பிருந்தே நன்கு பயிற்சி பெறுவதோடு, ஒலிம்பிக் விழாவிலும் முறையான ஒழுங்கு விதிகளையும் விளையாட்டு ஒழுக்க முறைகளையும் கடைப்பிடித்தனர். விளையாட்டு விழாவுக்குரிய ஒழுங்கு விதிகளை மீறுவோருக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. ஒலிம்பிக் போட்டியில் வெற்றியாளர்களுக்கு மிகுந்த உற்சாகமானதும் ஆடம்பரம் நிறைந்ததுமான வரவேற்பும் புகழாரமும் கிடைத்தது. அவர்களுக்கு 'ஒலிவ்' மரக்கிளையால் செய்யப்பட்ட கிரீடம் அணிவிக்கப்படும். ஒலிம்பிக் வெற்றியாளர்கள் வீரர்களாகக் கருதப்பட்டு, அவர்களுக்கு மிகுந்த கௌரவம் அளிக்கப்பட்டது.

## கிரேக்கத்தின் மகா தத்துவஞானி சோக்ரடீஸ்

கி.மு. 469 முதல் 399 வரை கிரேக்கத்தில் வாழ்ந்த சிரேஷ்ட சிந்தனையாளரான சோக்ரடீஸின் தந்தையாராகிய 'அத்தீனியான்' ஒரு கலைஞராவார். கிரேக்க தத்துவஞானிகளில் மிகவும் தனித்துவமானவரும் முக்கியத்துவம் நிறைந்தவருமான ஒரு தத்துவஞானியாக நாம் சோக்ரடீஸைக் கருதலாம். நன்மைகளையும் தீமைகளையும் குறித்து மக்களிடையே சிந்திக்கத் தூண்டியவர் அவரே. அத்துடன், கிரேக்க மக்களின் பழக்கவழக்கங்களையும் நடை, உடை பாவனைகளையும் மாற்றி அமைக்க அவரால் முடிந்தது. எனினும், சிலர் அவரின் சிந்தனைகளை ஏற்காததோடு, அதற்கு கடும் எதிர்ப்பும் தெரிவித்தனர். அதனால் சோக்ரடீஸ் இறுதியில் தனது உயிரை மாய்த்துக் கொள்ளும்நிலை ஏற்பட்டது.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே கலைகளுக்கும் விஞ்ஞானத்திற்கும் சிந்தனைப் புரட்சிக்கும் வித்திட்ட கிரேக்க நாகரிகம் என்றென்றும் போற்றப்படக்கூடியதே.



-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகுகள் இல்லையே!



பால்போல் நுரை கொண்டு
ஆற்றில் நீர் பாய்கையிலே
விருந்தாகும் காட்சியதை
பார்த்து ரசிப்பதற்கும்
பாடி மகிழ்வதற்கும்
நாடிச் சென்றது பறவைக் கூட்டம்
நதியின் பிரவாகத்தை
நானும் கண்டு மகிழ
திடம் கொண்ட மனதுடன்
பறந்து செல்ல நினைத்தேன்
முடியவில்லை ஏனெனில்,
எனக்கு சிறகுகள் இல்லையே!

தி.துஷாந்தி,
சாந்த கிளேயர் மகளிர் கல்., கொழும்பு.

# மௌனம் தந்த வெற்றி



வெளியூர் சென்று கொண்டிருந்த ஒருவன், வழியில் ஒரு சத்திரத்தைக் கண்டான். அங்கே தங்கி ஓய்வெடுத்துச் செல்லலாம் என்று எண்ணத்தில் குதிரையை விட்டு இறங்கினான்.

குதிரையுடன் சத்திரத்திற்கு அருகில் சென்ற குதிரைக்காரன் பக்கத்தில் இருந்த மரமொன்றில் குதிரையைக் கட்டினான். பின் சத்திரத்திற்குள் நுழைந்தான்.

அப்பொழுது அங்கிருந்த ஒருவன் குதிரையின் வாலைப் பிடித்து இழுத்தான். இதைப் பார்த்த குதிரைக்காரன், ''தம்பி, இது முரட்டுக் குதிரை, வாலைப் பிடித்து இழுக்காதே; உதைத்தால் பல்லெல்லாம் போய்விடும்'' என எச்சரித்து விட்டு உள்ளே சென்றான்.

ஆனால், அவனோ அந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்துவிட்டு மீண்டும் மீண்டும் அக்குதிரையின் வாலைப் பிடித்து இழுத்தான். வலி தாங்க முடியாமல் குதிரை ஓங்கி ஓர் உதை விட்டது. குதிரை விட்ட உதையால் அவனின் முன்பற்கள் எல்லாம் சிதறின. அதனால், அவன் பெரும் சினம் கொண்டு நீதிபதியிடம் சென்று வழக்குத் தொடுத்தான்.

வழக்குத் தொடங்கியது. நீதிபதி குதிரைக்காரனைப் பார்த்து, ''இந்தக் குதிரை உன்னுடையதா?'' என்று கேட்டார். ஆனால், அவனோ பதில் ஏதும் பேசவில்லை. ''உன் குதிரையால் இவனுக்கு எவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டிருக்கிறது; இதற்கு நீ என்ன சொல்கிறாய்?'' என்று மறுபடியும் கேட்டதற்கு குதிரைக்காரன் பதில் ஏதும் சொல்லவில்லை.

அதைக் கண்ட நீதிபதி, ''இவன் காது கேளாத ஊமையாக இருப்பானோ?'' என்று குதிரையுடன் சேட்டை செய்தவனைப் பார்த்துக் கேட்டார். உடனே அவன் குதிரைக்காரனைப் பார்த்து, ''என்ன உன் வாயில் கொழுக்கட்டையா வைத்திருக்கிறாய்? இது முரட்டுக் குதிரை, வாலைப் பிடித்து இழுக்காதே; உதைத்தால் பல்லெல்லாம் போய்விடும்'' என்று அப்பொழுது கத்தினாயே, இப்பொழுது காது கேளாத ஊமை போல நடித்து ஏமாற்றவா பார்க்கிறாய்?'' என்று கோபத்துடன் கத்தினான்.



இதைக் கேட்டதும் நீதிபதிக்கு உண்மை புரிந்தது. குதிரையிடம் சேட்டை செய்தவனைப் பார்த்து, ''நீ குதிரையின் வாலைப் பிடித்து இழுத்தாயா?'' என்று கேட்டார். அவன் தலைகுனிந்து நின்றான். குதிரைக்காரன் நீதிபதியிடம் ''நீதிபதி அவர்களே! தங்களுக்கு உண்மை தெரியவேண்டும் என்பதற்காகவே ஊமை போல் நடித்தேன். மன்னித்துவிடுங்கள்'' என்றான். வழக்குத் தொடுத்தவனைக் கடுமையாகக் கண்டித்து அனுப்பிய நீதிபதி, குதிரைக்காரனின் அறிவுக்கூர்மையைப் பாராட்டினார்.

எம்.எல்.எஃப்.ஹஸ்னா,
இ/பாலர் இயேசு கன்னியர் மடம், (தே.பாட)
இரத்தினபுரி.




## புதிர்கள்

1. எட்டு எழுத்துக்களையுடைய பெருங் காப்பியம். முதலிரு எழுத்துக்களையும் சேர்த்தால் கொஞ்சம் என்றும் நான்காவது மற்றும் ஐந்தாவது எழுத்துக்களைச் சேர்ந்தால் கணவன் என்றும் ஈற்றெழுத்துக்கள் மூன்று உறைப்பையும் குறிக்கும். அது என்ன?

2. உயிருள்ள படைப்பு ஒன்று. முதலெழுத்து உரிமையுடன் கேட்பதையும் இறுதி எழுத்து மூன்றும் இறைவனிடம் கேட்பதையும் குறிக்கும். அது என்ன?

3. நான்கு எழுத்துக் கொண்ட ஓர் ஊர்வன. முதலிரு எழுத்துக்களும் ஆடையில் படிவதையும், இறுதி எழுத்திரண்டும் இலக்கண முறையில் நான் என்பதையும் குறிக்கும். அது என்ன?

4. ஐந்து எழுத்துக்களைக் கொண்ட பறவை. முதலிரு எழுத்துக்களும் கடல்வாழ் உயிரினமொன்றைக் குறிக்கும். இறுதி மூன்று எழுத்துக்களும் கோழி தானியத்தை உண்ணும் முறையைக் குறிக்கும். அது என்ன?

5. இரண்டெழுத்துக் கொண்ட உயிரினம். முதல் எழுத்து பசுவையும், இறுதி எழுத்து பேனாவிற்கு உபயோகிக்கும் ஒரு பொருளையும் குறிக்கும். அது என்ன?

### விடைகள்

1. சிலப்பதிகாரம்
2. தாவரம்
3. கறையான்
4. மீன்கொத்தி
5. ஆமை

நி.ப.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.


படத்தை இங்கே ஒட்டவும்



விஜய்
மாணவர் கழகம்
விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..................................
முகவரி:..................................
..................................
பாடசாலை:..................................
வகுப்பு:..................................
திகதி: ..................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு


# கல்வியே வேண்டும்



எழுதப் படிக்கத் தெரிந்து கொள்
எழுந்து நிற்பாய் புரிந்து கொள்
கவலையற்ற எதிர்காலத்துக்கு
கல்வியே வேண்டும் உணர்ந்திடு!

காசு வரும் போகும்
கல்வி வளரும் போகாது
பெற்ற பிள்ளை கைவிட்டாலும்
கற்ற கல்வி கைவிடாது!

கல்வி கற்றால் முன்னேற்றம்
பெறாவிட்டால் தடுமாற்றம்
என்றும் இருப்பது கல்வி என்னும் நலம்
எண்ணும் எழுத்தும் பயின்றிடுவோம்
இனிதே மகிழ்ந்து வாழ்ந்திடுவோம்!

ர.ஜோய் பின்ரன்,
அ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்., திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அங்.இல : 2271

இரா.நிலூஜன்,
தரம் - $8^{A}$,
சாவகச்சேரி இ.கல்.,
சாவகச்சேரி.



அங்.இல : 2272

எம்.ஆர்.எம்.றினாஸ்,
தரம் - $7^{C}$,
ஸாஹிரா கல்.,
கம்பளை.



அங்.இல : 2273

ஆர்.நிருஜன்,
தரம் - 2,
நோர்வூட் த.ம.வித்.,
நோர்வூட்.



அங்.இல : 2274

யோ.யோனியா,
தரம் - 11,
பெரிய பண்டிவிரிச்சான் ம.வித்.,
மன்னார்.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2275

ஜெ.அக்காஷ்,
தரம் - $4^{A}$,
சரஸ்வதி க.வித்.,
பதுளை.



அங்.இல : 2276

எஃப்.எஃப்.பாசியா,
தரம் - $5^{T}$,
புனித அந்தோனியார் பெ.பாட.,
கண்டி.



அங்.இல : 2277

விஜய் வடிவேல்,
தரம் - $5^{C}$,
கார்மேல் பாத்திமா தே.பாட.,
கல்முனை.



அங்.இல : 2278

ஆர்.எம்.ரிஸான்,
தரம் - 12,
தில்லையடி மு.ம.வித்.,
புத்தளம்.



அங்.இல : 2279

ஐ.எஃப்.சுஜானா,
தரம் - $8^{E}$,
அட்டாளைச்சேனை ம.ம.வித்.,
அட்டாளைச்சேனை.



அங்.இல : 2280

சி.கரிதாஸ்,
தரம் - $9^{D}$,
புனித மிக்கேல் கல்.,
மட்டக்களப்பு.



அங்.இல : 2281

த.விஜிகரன்,
தரம் - $11^{B}$,
கனகராயன்குளம் ம.வித்.,
வவுனியா.



அங்.இல : 2282

எம்.ஜே.இஸ்னா,
தரம் - 11,
அல்மினா மு.ம.வித்.,
ஹக்மன.







விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

வத்தளை, எந்தல 'லிட்டில் ஃப்ளவர்' பாலர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற வருடாந்த விழாவின்போது மாணவர்கள் வழங்கிய சில கலை நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.



நாவலப்பிட்டியைச் சேர்ந்த ராஜேந்திரன்-அழகுசுந்தரி தம்பதியரின் செல்வப்புதல்வி கயல்விழி, தனது இரண்டாவது பிறந்தநாளை 30.11.2008 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்-விஜித்தா)



நிந்தவூர்-11 ஐச் சேர்ந்த அமீன்-றவீனா தம்பதியினரின் செல்வப்புதல்வி பாத்திமா நஃப்லா, தனது மூன்றாவது பிறந்தநாளை 28.11.2008 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



கிருங்கதெனியவைச் சேர்ந்த முஹம்மட் ரம்ஸான்-ஃபாத்திமா சபீக்கா தம்பதியரின் செல்வப் புதல்வி ஆயிஷா, 26.11.2008 அன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஃப்.அஷ்கா அரூஸ்,
தரம் - $7^{B}$,
பதுரியா மு.ம.வித்.,
தெல்கஹதெனிய.



ஏ.நஸீஹா,
தரம் - $8^{A}$,
கமு/புலவர்மணி
ஷரிபுத்தீன் வித்.,
மருதமுனை.



ஏ.எம்.ரிம்ஸாட்,
தரம் - $7^{B}$,
ப/சேர் ராசிக் ஃபரீட்
மு.ம.வித்.,
பண்டாரவளை.



பி.எம்.ஸஹ்ரான்,
தரம் - $7^{D}$,
விஜயரத்தினம் இ.ம.கல்.,
நீர்கொழும்பு.




ஏ.மார்டின்,
தரம் - 5,
புனித பத்திரிசியார் கல்.,
தலவாக்கலை.



சே.விக்னேஸ்வரன்,
தரம் - $6^{B}$,
மா/இந்து தேசிய கல்.,
மாத்தளை.



எம்.எல்.எஃப்.ஹஸ்னா,
தரம் - $8^{T}$,
பாலர் யேசு கன்னியர் மடம்
(தே.பாட.,),
இரத்தினபுரி.



த.தவச்சந்திரா,
தரம் - $10^{C}$,
சித்திவிநாயகர் இ.கல்.,
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அக்காவுக்கும் தங்கைக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

අක්කා: නංගි පෙති හලන්නේ නැතිව මල් කඩන්න.
நங்கி பெதி ஹளன்னே நெதிவ மல் கடண்ண.
அக்கா: தங்கச்சி இதழ்கள் விழாமல் பூக்களைப் பறியுங்கள்.

නංගි: මල් පෙති නිකම්ම වැටෙනවා.
மல் பெதி நிகம்ம வெடெணவா.
தங்கை: பூக்களின் இதழ்கள் தாமாகவே விழுகின்றன.

අක්කා: අලුත් මල් කඩන්න පෙති හැලෙන්නේ නැහැ.
அலுத் மல் கடண்ண.பெதி ஹெலென்னே நெஹெ.
அக்கா: புதுப் பூக்களை பறியுங்கள். இதழ்கள் விழா.

නංගි: එක මලක පෙති කීයක් තියෙනවාද අක්කේ?
எக மலக பெதி கீயக் தியெணவாத அக்கே?
தங்கை: ஒரு பூவில் எத்தனை இதழ்கள் இருக்கு அக்கா?

අක්කා: සමහර මල්වල පෙති තුනක් තියෙනවා.
சமஹற மல்வள பெதி துனக் தியெணவா.
அக்கா: சில பூக்களில் மூன்று இதழ்கள் இருக்கும்.

සමහර මල්වල පෙති පහක් තියෙනවා.
சமஹற மல்வள பெதி பஹக் தியெனவா.
சில பூக்களில் ஐந்து இதழ்கள் இருக்கும்.

සමහර මල්වල පෙති දහයක් තියෙනවා.
சமஹற மல்வள பெதி தஹயக் தியெனவா.
சில பூக்களில் பத்து இதழ்கள் இருக்கும்.

සමහර මල්වල පෙති ගොඩක් තියෙනවා.
சமஹற மல்வள பெதி கொடக் தியெனவா.
சில பூக்களில் நிறைய இதழ்கள் இருக்கும்.

නංගි: රෝස මලේ පෙති ගොඩක් තියෙනවනේද අක්කේ?
ரோஸ மலே பெதி கொடக் தியெனவநேத அக்கே?
தங்கை: ரோஜாப் பூவில் நிறைய இதழ்கள் இருக்கும் தானே அக்கா?



අක්කා: ඔව් නංගි.
ஒவ் நங்கி.
அக்கா: ஆம் தங்கச்சி.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: தங்கச்சி இதழ்கள் விழாமல் பூக்களைப் பறியுங்கள்.
නංගි පෙති හලන්නේ නැතිව මල් කඩන්න.

i. புதுப் பூக்களைப் பறியுங்கள்.
........................................

ii. சில பூக்களில் மூன்று இதழ்கள் இருக்கும்.
........................................

iii. ரோஜாப் பூவில் நிறைய இதழ்கள் இருக்கு.
........................................






✱ **Is எனும் துணைவினைச் சொல்லை** (Auxiliary Verb), **ஒரு வாக்கியத்தில் தனியொரு வினைச்சொல்லாக கையாளுகின்றபோது, அவ்வாக்கியம் பின்வருமாறு அர்த்தம் கொள்ளப்படுகின்றது.**

(அ) He is.
அவன் இருக்கின்றான். (ஆண்பால்-உயர்திணை)

(ஆ) She is.
அவள் இருக்கின்றாள். (பெண்பால்-உயர்திணை)

(இ) It is.
அது இருக்கிறது. (ஒன்றன்பால்-அஃறிணை)

(அ) He is in the class.
அவன் வகுப்பில் இருக்கின்றான். (ஆண்பால்)

(ஆ) She is at home.
அவள் வீட்டில் இருக்கின்றாள். (பெண்பால்)

(இ) It is in the garden.
அது தோட்டத்தில் இருக்கின்றது. (ஒன்றன்பால்)

**குறிப்பு:** மேற்படி வாக்கியங்களின்படி, 'is' என்பதற்கு ஆரம்பநிலையில், 'இருக்கின்றான்' (ஆண்பால்), 'இருக்கின்றாள்' (பெண்பால்), 'இருக்கின்றது' (ஒன்றன்பால்) என மூன்று விதமாக அர்த்தம் கொள்ளப்படுகின்றது.

✱ **'Is' என்பது இரண்டாவது நிலையில் பின்வருமாறு அர்த்தம் கொள்ளப்படுகின்றது.**

(அ) He is a student.
அவன் ஒரு மாணவன் ஆவான். (ஆண்பால்)

(அ) She is a nurse.
அவள் ஒரு தாதி ஆவாள். (பெண்பால்)

(ஆ) It is a bird.
அது ஒரு பறவை ஆகும். (ஒன்றன்பால்)

**குறிப்பு:** மேற்படி வாக்கியங்களில், 'is' என்பதற்கு இரண்டாவது நிலையில் 'ஆவான்' (ஆண்பால்), 'ஆவாள்' (பெண்பால்), ஆகும் (ஒன்றன்பால்) என மூன்று விதமாக அர்த்தம் கொள்ளப்படுவதை அவதானித்துக் கொள்வோம்.

✱ **மேலும், ஒரு விளக்கம்: 'is' எனும் துணைவினைச் சொல்** (Auxiliary Verb) **ஒரு வாக்கியத்தில், தனியொரு வினைச்சொல்லாக கையாளப்படுகின்றபோது, ஏனைய சாதாரண வினைச்சொல்லைப்** (Ordinary Verb) **போன்றே, 'is' கணிக்கப்படுகின்றது என்பதை முன்னைய வாக்கியங்களில் கண்டு கொண்டோம்.**

✱ **'is' எனும் துணைவினைச் சொல்** (Auxiliary Verb) **சகிதம் நிகழ்கால எச்சவினைச்சொல்** (Present Participle) **அதாவது 'ing' சேர்ந்த வினைச்சொல் கையாளப்பட்டு அமைக்கப்படும் வாக்கியங்கள் பின்வருமாறு அர்த்தம் கொள்ளப்படுகின்றன.**

(அ) He is reading.
அவன் வாசித்துக்கொண்டு இருக்கின்றான். (ஆண்பால்)

(ஆ) She is studying.
அவள் படித்துக்கொண்டு இருக்கின்றாள். (பெண்பால்)

(இ) It is flying.
அது பறந்துகொண்டு இருக்கின்றது. (ஒன்றன்பால்)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# பொருளாதாரத்தை உலுக்கிய மும்பாய் தாக்குதல்...!



இந்தியாவின் மும்பாய் நகரில் கடந்த 27 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் காரணமாக மும்பாய் நகரத்திற்கு மாத்திரம் 4000 கோடி ரூபாய்க்கு மேல் நட்டம் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த நாளன்று மும்பாயின் முக்கிய பத்து இடங்களில் இனந் தெரியாத ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலின்போது நூற்றுக் கணக்கானோர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் பல எண்ணிக்கையானோர் காயங்களுக்கும் உள்ளாகியிருந்தனர்.

இந்த சம்பவத்தின் காரணமாக ஹோட்டல்கள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டமையால் நாளொன்றிற்கு 1000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இந்த நிலை நான்கு நாட்களுக்கு நீடித்துள்ளமையால் ரூ 4,000 கோடிக்கு மேல் மொத்த இழப்பு ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, பங்குச்சந்தைகளும் மூடப்பட்டமையால் ஒட்டுமொத்த பொருள்தாரத்திலும் பாரிய முடக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த பாரிய தாக்குதல் சம்பவத்தின் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்வதற்கு நீண்ட காலம் செல்லும் என்றும் கூறப்படுகின்றது.

# தாய்லாந்து ஆர்ப்பாட்டம் முடிவிற்கு வந்தது



தாய்லாந்தின் பிரதமர் சோம்சாய் பதவி விலகவேண்டும் எனக்கோரி அந்நாட்டில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் முடிவிற்கு வந்துள்ளன. ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற அதே சமயம் ஆளும் அரசை கலைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதனையடுத்து பிரதமர் சோம்சாய் பதவி விலகுவதற்கு சம்மதம் தெரிவித்ததையடுத்து மேற்படி ஆர்ப்பாட்டம் முடிவிற்கு வந்தது.

முன்னதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதான இரண்டு விமான நிலையங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து விமானப் போக்குவரத்தைத் தடுத்தமையால் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் பலர் சொந்த நாட்டிற்கு திரும்ப முடியாமல் அவதிப்பட்டனர்.

எனினும், குறித்த வெளிநாட்டு விமான சேவை நிறுவனத்தினர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியமையால் குறித்த வெளிநாட்டு விமான சேவைகளை நடத்துவதற்கு ஆர்ப்பாட்டக் காரர்கள் அனுமதி வழங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் முற்றுகைக்குள்ளான விமான நிலையங்களில் ஒரு விமான நிலையம் தலைநகர் பெங்கொக்கிலிருந்து 700 கி.மீற்றர் தொலைவிலும் மற்றைய விமான நிலையம் தலைநக ரிலிருந்து 850 கி.மீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குற்றவியல் பிரேரணை!



பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியாவிற்கு எதிராக அந்நாட்டின் எதிர்க்காட்சியினரால் கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றவியல் பிரேரணையை நாடாளுமன்றக் குழு நிராகரித்துள்ளது.

போதியளவு சாட்சியங்கள் இல்லாமையின் காரணமாகவே இப்பிரேரணையை நாடாளுமன்ற சிறப்புக் குழு நிராகரித்தது. மேலும், மேற்படி பிரேரணையை நிராகரிக்குமாறு கோரி 42 வாக்குகள் அளிக்கப்பட்ட அதே வேளை, எதிர்த்து 8 வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டன.

கடந்த இரண்டு வருடங்களுள் இரண்டு தடவைகள் ஜனாதிபதிக்கு எதிராக இவ்வாறு குற்றவியல் பிரேரணைகள் கொண்டுவரப்பட்ட போதிலும் அவை இரண்டையும் அவர் வெற்றி கொண்டுள்ளார். மக்கள் ஆணைப்படி அவரது பதவிக்காலம் 2010 ஆம் ஆண்டு வரை அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 181

**கேள்வி:** பிலிப்பைன்ஸ் ஜனாதிபதிக்கு எத்தனையாம் ஆண்டு வரை பதவிக்காலம் உள்ளது?

**சரியான விடை.........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 181,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 179 இன் சரியான விடை: 20 ஆம் திகதி ஜனவரி 2009**

**பரிசு பெறுவோர்**

இ.ஜான்சன்,
119 K/A, லக்ஷபான வீதி, தோணிக்கல், வவுனியா.

ஹமீதா பானு லியாவுதீன்,
33/A, முஸ்லிம் பள்ளி ஒழுங்கை,
நாவல வீதி, இராஜகிரிய.

பி.தவப்பிரியா,
436, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.

# பிரேஸிலில் வெள்ளம்



பிரேஸில் நாட்டின் தெற்குப் பகுதியில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் 59 பேர் மரணமடைந்துள்ளதுடன் 43,000 பேர் அகதிகளாகியுள்ளனர்.

அநேகமானோர் வெள்ளத்தினால் ஏற்பட்ட மண்சரிவினால் மரணமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அகதிகளாகியுள்ளோரையும் வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருப்போரையும் காக்கும் பொருட்டு மீட்புப் படையினர் மோட்டார் படகுகளையும் ஹெலிகொப்டர்களையும் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும், புனித கெத்தரினா என்ற பிராந்தியத்தில் அவசரகால நிலையும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. போதிய மருந்து வகைகளையும் அத்தியாவசிய பொருட்களையும் வழங்குவதற்கு மத்திய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் பிரேஸில் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் தானம் செய்வதாயின்...



எமது நாட்டிலும் கண்களைத் தானம் செய்யும் நடைமுறை உள்ளது போன்றே ஏனைய உடல் உறுப்புகளைத் தானம் செய்யும் நடைமுறையும் உள்ளது.

## ஆரம்பம்

மருத்துவக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கும்போது ஹட்சன் சில்வா என்பவர் மேலும் இரு மருத்துவக் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து ஆராய்ச்சி ஒன்றினை மேற்கொண்டார். இந்த ஆராய்ச்சியின் போது இறந்த ஒருவரின் கண்ணின் கருவிழியைப் பயன்படுத்தி, பார்வைப்புலன் அற்றவருக்கு பார்வைப் புலனைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று கண்டறிந்தார். இது உலகின் புதியதொரு கண்டுபிடிப்பாகவும் அமைந்தது. இதுபற்றி அரசுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைய, 1961 இல் 'இலங்கை கண் தான சங்கம்' ஆரம்பிக்கப்பட்டது.

'இலங்கை கண் தான சங்கம்' இலங்கையில் இயங்கும் சிறப்பான, பலம் வாய்ந்த அமைப்பாகும். அதன் 400 கிளைகள் இலங்கை பூராகவும் இயங்குகின்றன. ஒருவரின் இறப்புக் குறித்து கிளைக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அந்த கிளையைச் சேர்ந்த அதிகாரிகள் வந்து கண்களைப் பெற்றுக்கொள்வார்கள். இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படுகின்ற கண்களைக் கொண்டு நோயாளிகளுக்கு பார்வைப் புலனைப் பெற்றுக் கொடுக்க அதிகபட்ச முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொள்வர். கண் தான சங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்படும் கண்கள் இலங்கையில் எவருக்கும் விற்கப்படுவதில்லை.

வருடாந்தம் சுமார் இரண்டாயிரம் கண்கள் தானமாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இவற்றில் இலங்கையில் 800-850 வரையிலான கண்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய கண்களை மருத்துவர்கள் சிறந்த தரத்தில் பேணி வெளிநாடுகளுக்கு வழங்குகின்றனர். இதன்படி, 50க்கும் அதிகமான நாடுகளுடனும் 120 நகரங்களுடனும் கண் தான சங்கம் இணைந்து செயற்படுகின்றது.

இலங்கையிலிருந்து பெருமளவில் கண்கள் பாகிஸ்தானுக்கே தானமாக வழங்கப்பட்டுள்ளன. முதன்முதலாக சிங்கப்பூருக்கே கண் தானமாக வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே, உலகின் பல்வேறு நாடுகளிலும் இறந்தவர்களிடம் இருந்து கண்களைப் பெறும் நடைமுறை இருந்து வருகின்றது.

### கண்கள் மற்றும் முழு உடலையும் தானம் கொடுப்பதற்கான இணக்கப்பத்திரம்

**கண்கள் மற்றும் இழையங்களை தானமாக வழங்குவதற்காக கண் தான சங்கத்தின் இணக்கப்பத்திரத்தில் தானமளிப்பவர் கையொப்பமிட வேண்டும். அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும்.**

**(தானம் கொடுப்பவரின் பெயர்) ஆகிய நான், 1955, 38 ஆம் இலக்க கருவிழி பொருத்தும் சட்டம் மற்றும் 1987, 48 ஆம் இலக்க மனித இழையங்களைப் பொருத்தும் சட்டத்தின்கீழ் பார்வைப்புலனற்றவருக்கு பார்வையளிக்கவும் இழையங்களை தானமளித்து நோயாளிகளுக்கு வாழ்வளிக்கவும்/பரிசோதனைக்காகவும் எனது மரணத்தின் பின்னர் கண்கள்/இருதயம்/உடல் உறுப்பு அல்லது முழு உடலையும் தானமளிக்க விருப்பம் தெரிவித்து கீழே கையொப்பமிடுகின்றேன்.**

**சாட்சி ................கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.**

மேலதிக விபரங்களுக்கு:

**வைத்தியர் ஹட்சன் சில்வா கண் தான சங்கம்,**
**வித்யா மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி-011-2698040, 2698041, 2698043, 2692051**

### கண் தானம் செய்யும் விதிமுறை

ஒருவரது இறப்பினை அடுத்தே கண் தானம் செய்ய முடியும். இவ்வாறு கண் தானம் செய்ய விரும்புவோர் கண் தான சங்கத்தில் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதனை அடுத்து குறித்த நபர் மரணித்ததன் பின் அவரது உறவினர்களின் ஒப்புதலுடன், இறந்து நான்கு மணித்தியாலங்களுக்குள் இறந்தவரது கண்கள் இரண்டும் பெற்றுக் கொள்ளப்படும். கண் தானம் செய்ய வயதெல்லை கிடையாது. கண் தானம் செய்யும் இணக்கப் பத்திரம் இல்லாவிடின், குடும்பத்தினரின் விருப்பத்தின் பிரகாரம் கண்களைத் தானம் செய்ய சட்டத்தில் இடமுண்டு. கண் தானம் செய்யும் நபரின் பூதவுடலுக்கு அருகாமையில் கண் தான சங்கத்தின் அஞ்சலி செலுத்தும் கொடி நடப்பட்டிருக்கும்.

### தானம் கொடுக்கப்பட்ட கண்களால் பிறருக்கு புதுப் பார்வை

பார்வைப் புலன் குறைபாட்டால் அவதியுறும் ஒருவருக்கு பார்வைப் புலனை மீண்டும் பெற்றுக்கொடுக்க முடியுமெனில், அதுதான் நம்மால் ஒருவருக்கு செய்யக்கூடிய மிகப்பெரிய உதவியாகும். பார்வைக்கோளாறு உள்ளவர்களுக்கு அவர்களின் கோளாறுக்கு ஏற்ப தானம் கொடுக்கப்பட்ட கண்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. மஞ்சள் காமாலை போன்ற தொற்று நோய்கள், மூளை, முள்ளந்தண்டு வீக்கம் மற்றும் விசர் நாய்க்கடி போன்ற அபாயகரமான நோய்களால் பாதிப்புக்குள்ளானவர்களின் கண்கள் தானமாகப் பெறப்பட மாட்டாது. விபத்துக்களில் இறந்தவர்களாயின் மரண விசாரணை அதிகாரியின் முழு அனுமதியின் பின்னர் கண்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

### இழைய வங்கி (Tissue Bank)

கண் தான சங்கம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் உடற் பாகங்களை தானமாக வழங்குபவர்களிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளும் முகமாக 1996 இல் இழைய வங்கி ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கை கண் தான சங்கத்தினூடாக செயற்பட்டு வருகின்றது. உடலில் கால் மற்றும் கைகளில் உள்ள எலும்புகள், மண்டையோடு, இருதயத்தசைகள், மண்டை ஓட்டுக் கவசம், காது மடல்கள், தோல், மூட்டு எலும்புகள் என 18 இழைய உறுப்புகள் இதற்காகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட இழையங்களில் பெரும்பாலானவை நோய்வாய்ப்பட்ட இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டுள்ளன. இராணுவ வைத்தியசாலை, தேசிய வைத்தியசாலையின் அவசரப் பிரிவு என்பனவற்றில் உடல் இழையங்களுக்கான கேள்வி அதிகமாக நிலவுவதாலும் இழையங்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாலும் இந்த இழையங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதில்லை.

ஒருவர் இறந்து 12 மணித்தியாலங்களுக்குள் அவரது பூதவுடல் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இதன்போது, உடல் பதப்படுத்தப்படவோ (Embalm), வளைக்கப்படவோ கூடாது. கண் தானத்திற்கு வயதெல்லை இல்லாவிட்டாலும், இழையங்களானது 5 முதல் 70 வயதுக்குட்பட்ட உடலிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படும். தொற்று நோய்கள் மற்றும் புற்றுநோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களைத் தவிர ஏனையவர்களின் இறந்த உடல்கள் பெறப்படும். இழைய வங்கியினால் தேவையான உடற் பாகங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் உடல் இறுதிச் சடங்குக்காக உறவினர்களிடம் கையளிக்கப்படும். இறந்தவர்களின் உடல் குறித்த வயதெல்லையைத் தாண்டியிருப்பின் அவ்வுடல் மருத்துவக் கல்லூரிக்குப் பயன்படும்.



ஹட்சன் சில்வாவின் உருவச்சிலை



பெறப்பட்ட மண்டை ஓடொன்று




இழையங்களைத் தேவையானவாறு பிரிக்கப் பயன்படும் இயந்திரம்



பெறப்பட்ட இழையத் தொகுதியொன்று வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது



பெறப்படும் இழையங்கள் பாதுகாக்கப்படும் முறை



கருவிழிப் பகுதி பொருத்தப்பட்ட கண்



பெறப்பட்ட இழையத் தொகுதிகள் பாதுகாக்கப்படும் அதி குளிர்சாதனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாழடைந்த வீட்டுப்பக்கம் அவன் கண்ட மர்மம்



'சரக் சரக்' என்னும் காலடிச்சத்தம் மேலும் மேலும் அதிகரிக்கவே 'இந்த நேரத்தில் இங்கு வருவது யாராக இருக்கும்' என்று சிந்தித்தபடியே விமல் போர்வையை இறுகப் போர்த்துக் கொண்டு உறங்குவதுபோல் பாசாங்கு செய்து கொண்டு இருந்தான்.

அங்கு வந்த அந்த உருவம் அவனை சிறிது நேரம் பார்த்துக் கொண்டு நிற்கிறது என்பது விமலுக் குப் புரிந்தது. பின்னர் ''விமல், தம்பி..... விமல் தம்பி..'' என்று அந்த உருவம் அழைக்கும் சப்தம் கேட்டது.

அந்தக் குரலுக்கு உரியவர் காவல்காரர்தான். அவர் இரண்டு மூன்று தடவை விமலைக் கூப்பிட்டுப் பார்த்தார். விமல் அயர்ந்து உறங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டு பேசாமல் இருந் தான்.

இரண்டு மூன்று தடவை கூப்பிட்டுப் பார்த்தவர் பின்னர், ''ம்..... தம்பி, நன்றாகத் தூங்குகிறார் போலிருக்கிறது. ம்..... தூங் கட்டும் பாவம்'' என்று கூறியபடியே அங்கிருந்து திரும்பிச் சென்றார்.

விமலுக்கு நிம்மதி ஏற்பட் டது. 'காவல்காரர், ஏன் என்னை வந்து கூப்பிட்டி ருப்பார். பேய் பற்றிய அனு பவத்தை நான் உங்களுக்குக் காட்டித்தருகிறேன் என்று என்னிடம் கூறினாரே. அது பற்றி எதுவும் பேசுவதற்காக இருக்குமோ? இருக்கும் இருக்கும். அவரைத்தான் பேய்மனிதன் என்று மாதவன் அண்ணன் கூறி னாரே'' சிந்தித்துக் கொண்டே உறங்குவதற்கு முயற்சித்தான் விமல். ஆனாலும், அவனுக்கு அன்று எவ்வளவு முயற்சித்தபோதும் உறக்கமே வர வில்லை. அவனுக்கு மீண்டும் சிந்தனைகள் ஏற்பட்டன.

'காவல்காரருக்கு இரவில் மட்டும் பேய்க்குணம் ஏற்படுவது உண்மையாக இருக்குமா? இப் பொழுது இங்கு வந்து என்னைக் கூப்பிட்டபோது சாதாரணமாகத் தானே இருந்தார். சாதாரண மனித ராக இருந்தால் அந்த மோகினிப் பெண்ணோடு எப்படி தொடர்பு வைத்துக்கொண்டு இருக்கிறார். அவள் மோகினியாக இல்லாமல் சாதாரண பெண்ணாக இருப் பாளோ? இருக்க முடியாதே. இதற்கு முன்னர் அவளை இரண்டு முறை பார்த்துவிட்டேன். இன்று மூன்றாவது முறையாகவும் பார்த்து விட்டேன். பார்க்கும் போதெல்லாம் 'டக்டக்' என்று மறைந்து விடுகிறாள். அதுமட்டு மல்ல...; அவளுடைய போட் டோவை நான் பார்த்தேனே. அவ ளுடைய அப்பா, அவள் இறந்து விட்டதாகக் கூறிக் கவலைப்பட் டாரே. இறந்து போனவள் எப்படி மீண்டும் உயிருடன் வரமுடியும்?''

சிந்திக்கையில் அவனுடைய மூளை குழம்புவதுபோல் இருந் தது. 'ச்சே! ஏன்தான் இங்கு வந்து தொலைந்தேனோ? பயப்படாமல் சிந்தித்துப் பார்த்தாலும் என்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என புரியவில்லையே! அந்தக் காவல் காரர் என்னைப் பார்த்து எதையும் ஆராய்ந்து பார்க்காமல் இருந்தால்

**அந்த மர்மப்பெண் நான் பார்க்கும் போதெல்லாம் 'டக்டக்'கென்று மறைந்து விடுவதன் காரணம் என்ன? என்று விமல் சிந்திக்கலானான்.**

கடைசிவரை பயந்தாங்கொள்ளி யாகவே இருக்க வேண்டியதுதான் என்று கூறினாரே. அப்படியானால் நான் பயந்தது அவருக்குத் தெரிந்து இருக்கிறது. அதனால் நான் இனியும் பயந்து கொண்டு இருக்கக்கூடாது. அவர் சொன்னது போல் எதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்று தூக்கமும் வரமாட் டேன்கிறது. ஆதலினால், இப்பொ ழுது போய் காவல்காரருக்குத் தெரி யாமல் அவர் என்ன செய்கிறார் என்று பார்த்தால் என்ன? நினைத்த வன் விரைந்து செயல்பட்டான். எழுந்து நேரத்தைப் பார்த்தான்.

நேரம் மூன்று மணியாகி இருந்தது. மூன்று மணி என்றதும் அவன் மனதில் சிறிது அச்சஉணர்வு ஏற்படு வது போல் இருந்தது. ஏனென்றால், மூன்று மணி அளவில்தான் பேய் களின் நடமாட்டம் இருக்கும் என்று அவன் கேள்விப்பட்டு இருக்கிறான். அத்தோடு, அவன் அன்று மூன்று மணிக்கு 'பஞ்சிங்' அடிக்கச் சென்ற போது நடந்த சம்பவமும் நினை வுக்கு வந்தது. அதாவது, மதில் சுவ ருக்கு அப்பால் உள்ள பாழடைந்த வீட்டுக்கு அருகில் இருந்த கரிய உருவம். அந்தக் கரிய உருவம் பேயாக இல்லாமல் வேறு எதுவுமாக வும் இருக்குமா? இருக்க முடியாதே இருந்தால் ஏன் அது என்னை அடிப்ப தற்குக் கையை ஓங்கவேண்டும்?

சிந்தித்தவன் தைரியத்தை ஏற்ப டுத்திக்கொண்டு எழுந்து நடந்தான். வெளியில் போய் காவல்காரர் எங்கு இருக்கிறார் என்று சுற்றுமுற் றும் நோக்கினான். காவல்காரரைக் காணவில்லை. அப்படியானால் பின்னால் பஞ்சிங் குளொக் பக்கம் தான் போய் இருப்பார்.

அங்கு போய் பார்த்தால் என்ன? என்று நினைத்த வனுக்கு சிறிது நடுக்கமாகஇருந்தாலும் கோழை ஆயிரம் முறை சாகி றான்.வீரன் ஒருமுறையே சாகிறான் என்னும் பழமொழி ஞாபகத்துக்கு வந்ததும் தைரியத்தை வரவழைத் துக் கொண்டு விரைந்து நடந்தான். திரையரங்குக்குப் பின்னால் சிறிது தூரம் நடந்து சென்றபோது.....

அங்கே.....

''ஹெஹ்.... ஹெஹ்... ஹெஹ்....'' என்று ஒரு வித்தியாசமான சிரிப்புச் சத்தம் வருவது கேட்டு அப்படியே நின்றுவிட்டான். அந்தச் சத்தம்... அந்தப் பாழடைந்த வீட்டுப் பக்கம் இருந்துதான் வந்தது. இருளில் மறைந்தபடி நின்று கவனித்தான்.

அந்தப் பாழடைந்த வீட்டுப் பக்கம் பார்த்துக்கொண்டு சுவரோரமாக நின்று கொண்டு இருப்பது யார்?

அது....? காவல்காரர்தான். அப்படியானால் அந்தக் கரிய உருவத்துடன் அவருக்கு என்ன தொடர்பு? அந்தக் கரிய உருவம் தான் இப்படி வித்தியாசமாகச் சிரித்ததா? காவல்காரர் அங்கு என்ன செய்கிறார்? அவனு டைய உடல் குப்பென வியர்த்து விட்டது. அவனையும் அறியாமல் நடுங்க ஆரம்பித்தான்.

(தொடரும்...)

# கழுதையின் தந்திரம்



அந்த அழகிய பச்சைப் பசேல் என்ற புல்வெளியில் கழுதை ஒன்று மேய்ந்து கொண் டிருந்தது. அந்தப் பக்கமாக வந்த ஓர் ஓநாய் அதைப் பார்த்துவிட் டது. 'இன்று நமக்கு வேட்டை தான். இந்தக் கழுதையைக் கொன்றால் இரண்டு மூன்று நாட் களுக்கு உணவுக்குப் பஞ்சமே இருக்காது' என்று எண்ணிக் கொண்டு கழுதையை நோக்கிப் பாய்ந்தது ஓநாய். ஓநாயிடமி ருந்து தப்பமுடியாது என்று கழுதை புரிந்துகொண்டது. ஏதா வது தந்திரம் செய்து அதனிட மிருந்து தப்ப வேண்டுமென்று முடிவு செய்தது.



கழுதை ஓநாயை நோக்கி, ''ஓநாயாரே! அவசரப்பட வேண் டாம். உம்மிடமிருந்து நான் தப்பி செல்லமுடியாது. உமக்கு நான் இரையாவது உறுதி. அதற்கு முன்னால் ஒரு விஷயத்தை உமக்குச் சொல்லியாக வேண் டும். என்னுடைய பின்னங்கால் ஒன்றில் பெரிய முள் ஒன்று தைத்து விட்டிருக்கிறது. அந்த முள்ளை எடுக்காமல் என்னை நீ கொன்று சாப்பிட்டால் என் காலில் உள்ள முள் உன் தொண் டையில் சிக்கி கிழித்துவிடும். ஆகவே, முதலில் அந்த முள்ளை எடுத்துவிடும். பிறகு என்னைக் கொன்று தின்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை யில்லை'' என்று கூறியது. கழுதை கூறியதை உண்மை என்று நம்பிய ஓநாய் அதன் பின்னங்கால் பக்கமாகச் சென்று ''முள் எங்கே இருக் கிறது?'' என்று கேட்டது.

''கொஞ்சம் பின்னாடி இருக்கிறது..'' என்றபடியே கழுதை தன் முழு சக்தியை யும் திரட்டி தனது பின்னங் காலினால் ஓநாயை ஓங்கி உதைத்தது. அந்த எதிர்பா ராத தாக்குதலினால் ஓநாயின் முகத்தில் உதை சரியாக விழுந்தது. அதன் கண்கள் அடிபட்டு சிதைந்து அதற் குக் கண் தெரியாமல் போய் விட்டது. முகத்தில் ஏற்பட்ட ரத்தக்காயம் காரணமாக உண்டான வலியை ஓநாயால் சகித்துக் கொள்ள முடியவில்லை. கழுதையி டம் உதை வாங்கி பழக்கப் படாத ஓநாய் விட்டால் கழுதை தன்னை உதைத்தே கொன்றுவிடும் என்று அஞ்சி அந்த இடத்தை விட்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 உலகக் கிண்ணப் போட்டிகள் எங்கு நடைபெறும்?



மும்பாயில் சில தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்த தாக்குதல் சம்பவத்தின் காரணமாக அடுத்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை தெற்காசிய நாடுகள் இழக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப்போட்டிகளை பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளே இணைந்து நடத்துவதாக இருந்தது. எனினும், அண்மைக் காலமாக பாகிஸ்தானில் ஏற்பட்ட குண்டுவெடிப்புக்கள் மற்றும் இந்தியாவின் மும்பாயில் ஏற்பட்ட தாக்குதல்கள் ஆகிய இரண்டு சம்பவங்களும் பாதுகாப்பற்ற தன்மையை வெளிக்காட்டி நிற்பதனால் குறித்த காலப்பகுதியில் போட்டிகளை நடத்த முடியாத நிலையே காணப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இந்த நாடுகளில் நடத்தப்படமாட்டாது என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, இது குறித்து கிரிக்கெட் நாடுகளின் சபைகளுடன் சர்வதேச கிரிக்கெட் சபை ஆலோசனை நடத்தவுள்ளது. இந்த ஆலோசனைகளின்படி குறித்தநாடுகளில் போட்டிகளை நடத்துவதற்கு அதிகமான நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தால் மேற்படி 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு அவுஸ்திரேலியா அல்லது நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் ஒன்றிற்கு வழங்கப்படக்கூடும். ஏனெனில், 2015 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கு இந்த இரண்டு நாடுகளும் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இவரைப் பற்றி..

## மெரடோனா



**காலப்பந்தாட்ட உலகின் நட்சத்திர நாயகன் என்று கருதப்படுபவர் மெரடோனா. அர்ஜன்டினா நாட்டைச் சேர்ந்த இவர் பிறந்தது 1960 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதியாகும். ஆர்ஜன்டினா தேசிய அணிக்காக இவர் 91 போட்டிகளில் போட்டியிட்டு 34 கோல்களைப் பெற்றுள்ளார். 1986 ஆம் ஆண்டில் ஆர்ஜன்டினாவிற்கு இவர் உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்தார். மெரடோனாவின் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் இங்கிலாந்துடனான இறுதிப்போட்டியில் 2-1 என்ற கணக்கில் ஆர்ஜன்டினா உலகக் கிண்ணத்தினை வெற்றி கொண்டது.**

**இந்த இரண்டு கோல்களையும் மெரடோனாவே பெற்றுக் கொடுத்திருந்தார். தற்போது ஆர்ஜன்டினா அணியின் பயிற்றுனராக மெரடோனா பணியாற்றி வருகின்றார்.**

## சிம்பாப்வே அணியின் கௌரவமான தோல்வி



இலங்கை-சிம்பாப்வே அணிகளுக்கிடையே சிம்பாப்வேயில் நடைபெற்ற 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரை இலங்கை அணி 5-0 என்ற கணக்கில் வெற்றியீட்டியுள்ளமை நாம் அறிந்ததே.

ஆனால், இவ்வாறு இலங்கை அணி தொடரை வென்றுள்ள போதிலும் கடைசி மூன்று போட்டிகளிலும் இலங்கைக்கு சிம்பாப்வே அணி பலத்த சவாலை ஏற்படுத்தியமை கிரிக்கெட் விமர்சகர்கள் மத்தியில் பெரும் பாராட்டுக்குரிய விடயமாக அமைந்துள்ளது. பலம் பொருந்திய முழு நிறைவான இலங்கை போன்ற ஓர் அணியிடம் சிம்பாப்வே போன்ற மூன்றாம் நிலை அணியொன்று இவ்வாறு சவால்விடும் பாணியில் விளையாடியமை சிம்பாப்வே அணியின் வளர்ச்சியையும் போராடும் குணத்தையும் நன்கு காட்டி நிற்கின்றது. குறிப்பாக சிம்பாப்வே அணியின் பந்து வீச்சு இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களை நிலை தடுமாறச் செய்து விட்டதென்றே கூறலாம். ஆகையால், இலங்கை அணிக்கு அதிகமான ஓட்டங்களைப் பெற முடியாத நிலையே ஏற்பட்டது. இத்தகைய ஒரு நிலையில் சிம்பாப்வே அணி துடுப்பாட்டத்தில் அதே அளவு திறமையைக் காட்ட முடியாமையின் காரணமாகவே கடைசித் தருணங்களில் வெற்றி இலக்கை அடைய முடியாமல் போனது.

முரளிதரன், அஜந்த மெண்டிஸ் ஆகிய இரண்டு பேரினது சிறந்த பந்து வீச்சுக்களின் காரணமாகவே இலங்கை அணி தனது கௌரவத்தை காத்துக் கொண்டது எனலாம். அந்த வகையில் சிம்பாப்வே அணிக்கு இது கௌரவமான தோல்வி என்றே கூறலாம்.

## இந்தியா-பாகிஸ்தான் போட்டி நடைபெறாது?

பாகிஸ்தானில் எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 19 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகி இருந்த



டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களில் இந்திய அணி பங்கேற்காது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

கால அட்டவணையின்படி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளிலும் ஒரு 'டுவென்டி டுவென்டி' போட்டிகளிலும் இந்த இரண்டு அணிகளும் போட்டியிடுவதாக இருந்தன. எனினும், அண்மைக்காலமாக பாகிஸ்தானில் தொடர்ச்சியாக குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்றமையால் இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்வதா? இல்லையா? என்பதை இந்திய அரசாங்கமே தீர்மானிக்க வேண்டிய நிலை இருந்ததால் கிரிக்கெட் சபையும் கிரிக்கெட் அணியினரும் இந்திய அரசாங்கத்தின் தீர்மானத்திற்காக காத்திருந்தனர். இத்தகைய நிலையில் மும்பாயில் பாரிய தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையானது இரண்டு நாடுகளுக்கும் இடையில் அரசியல் முறுகல் நிலையை ஏற்படுத்தியுள்ளமையால் குறித்த போட்டித் தொடர் நடைபெறாது என்றே கருதப்படுகின்றது. இந்திய அணியின் வீரர்கள் பலரும் கூட பாகிஸ்தான் செல்வதற்கு தயக்கம் காட்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



**கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற மெய்வல்லுனர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பயிற்சிகளை வழங்கிய ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வொன்று அண்மையில் அட்டாளைச்சேனை பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்போது, கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்களான ஏ.ஜி.பிர்ணாஸ், எம்.ஐ. சிமால்லைன், ஐ.எல்.இப்ராஹிம், எஸ்.எல்.றிஸாட் ஆகியோரை மாணவர்களுடன் படத்தில் காணலாம்.**

***(தகவல்: ஏ.ஆர். ஸஹிர் அஹமட்-விஜய் இளம் செய்தியாளர்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நூல்கள் நமக்கு நண்பர்கள்



'நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு நாம் தேர்ந்தெடுக்க வேண்டியது நல்ல நூல்களைத்தான்', என்று 'விஜய்'யில் பிரசுரமான ஒரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்ததை நீங்களும் வாசித்திருப்பீர்கள். நல்லவர்களோடு நாம் பழகும்போது நாம் நல்வழிப்படுத்தப்படுகின்றோம். அவ்வாறே, நல்ல நூல்கள் நம்மைச் செம்மைப்படுத்தி வாழ்வில் உயர வழிகாட்டும்.

நல்ல நூல்களை வாசிப்பதனூடாக அறிவை வளர்த்துக் கொள்ளலாம். எனவே, அத்தகைய நூல்களைத் தேடிக் கற்க வேண்டும். இவை எமது வாழ்க்கைக்கு ஊக்கமும் ஆக்கமும் தரும். சிறந்த நூல்கள் எம்மை புகழின் உச்சிக்கே அழைத்துச் செல்லக்கூடியன. நல்ல பண்புகளைக் கற்கவும் தீமைகளை அகற்றி நன்மைகளைப் பெறவும் இந்த நூல்கள் வழிகாட்டக்கூடியன.

நல்ல நூல்களைக் கற்க வேண்டியதன் அவசியத்தை அறிவுறுத்தும் பல பழமொழிகளும் உள்ளன. அவ்வாறே, உலகப் புகழ் பெற்ற பெரியார்களும் நூல்கள் வாசிப்பதன் அவசியத்தை வலியுறுத்திச் சென்றுள்ளனர்.

நூல் என்பது, 'சட்டைப்பைக்குள் கொண்டு செல்லும் பூந்தோட்டம்' என்று ஓர் அரேபியப் பழமொழி கூறுகிறது. நாம் அறிந்திராத பண்டைய நாகரிகங்கள் தோன்றிய வரலாறுகள், நமது வழித்தோன்றல்கள் பற்றிய உண்மைகள், வரலாற்றுச் சம்பவங்கள், கண்டுபிடிப்புகள் என்று பல்வேறுபட்ட விடயங்களை நமக்குத் தெரியப்படுத்துவது நூல்களே.



மொத்தத்தில் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஏன் எதிர்கால எதிர்வுகூறல்களையும் அறிந்துகொள்ள வேண்டின் அவசியம் நூல்களைப் படிக்கவேண்டும். 'ஒரு நூலை முதலில் படிப்பது, ஒரு புதிய நண்பனைக் கண்டுபிடிப்பது போலாகும்; அதை மீண்டும் படிப்பது பழைய நண்பனைச் சந்திப்பது போலாகும்' என்று சீனப் பழமொழியொன்று கூறுகின்றது.

**கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஏன் எதிர்கால எதிர்வு கூறல்களையும் அறிந்துகொள்ள வேண்டின் அவசியம் நூல்களைப் படிக்க வேண்டும்**

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களும் "நல்ல புத்தகங்களை வாசியுங்கள்; அப்போது நல்ல கனவு வரும்; அது உங்களை வெற்றிக்கு இட்டுச் செல்லும்" என்று கூறியுள்ளார். இங்கு அவர் சொல்ல வந்தது என்னவென்றால், நல்ல புத்தகங்களை வாசிப்பதனூடாக நல்ல கருத்துக்கள் உள்வாங்கப்படும். அப்போது, நல்ல இலட்சியங்கள் எம்முன் தோன்றலாம். அதன்படி செயற்பட்டால் நாம் வாழ்வில் முன்னேறலாம் என்பதாகும்.



அவ்வாறே, எகிப்திய மன்னரொருவர் தனது வாசிப்பு அறையை 'ஆன்மாவின் மருந்து' எனக் குறிப்பிட்டுள்ளார். இதனூடாகவும் நாம் நூலின் மேன்மை பற்றி அறிந்து கொள்ளலாம்.

ஐரோப்பிய அறிஞரொருவர், "ஐரோப்பாவிலுள்ள அனைத்து மணிமுடிகளையும் என்னிடம் கொடுத்து, என் நூல்களைபடிப்பதை நிறுத்தி விடும்படி எவரும் என்னைக் கேட்டால், நான் அந்த மணிமுடிகளை எறிந்து விட்டு, என் நூல்களை மட்டுமே என்னோடு வைத்திருப்பேன்" என்று கூறியுள்ளார்.

அறிஞர்கள் தாம் வாசித்த நூல்களில் தமக்குப் பிடித்த கருத்துக்களை வேறாக எழுதி, அவற்றை தங்களது கண்களுக்குப் புலப்படும் இடங்களில் வைத்திருந்தார்கள். இவ்வாறு திரும்பத் திரும்ப அந்தக் கருத்துக்களை வாசிக்கும்போது மனதில் புதுத் தெம்பு ஏற்படுகின்றது. இவை விரைவில் வெற்றியை நோக்கி முன்னேற அவர்களுக்குப் பெரிதும் துணை நிற்கின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நமக்குப் பிடித்த நல்ல நூல்களை ஆழமாக, கருத்து விளங்கிக் கற்க வேண்டும். அப்பொழுதுதான் அவை மனதில் ஆழமாகப் பதியும். நமது இலக்குகள் செயல்வடிவம் பெறுவதும் இதன்போதுதான். நாம் நண்பர்களைத் தேர்ந்தெடுத்துப் பழகுவது போல் நல்ல நூல்களையும் தேர்ந்தெடுத்து கற்கவேண்டும். ஏனெனில், நல்ல நூல்கள்தான் நமக்கு சிறந்த நண்பர்கள்.

**-ஜீநு**

## அச்சுக் கலையை அறிமுகப்படுத்திய

# ஜொஹன்னஸ் கட்டன்பேர்க்



அச்சுத்துறையில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்திய முதலாவது ஐரோப்பியர் எனும் பெருமைக்குரிய ஜொஹன்னஸ் கட்டன்பேர்க் (Johannes Gutenberg), 1398 இல் ஜேர்மனியின் மேன்ஸ் நகரில் பிறந்தார். இவர் நவீன அச்சு தொழில்நுட்பத்திற்கு வித்திட்டவராகவும் அச்சு இயந்திரத்தின் தந்தையாகவும் உலகளவில் போற்றப்படுகிறார்.

சிறு வயதில் மேன்ஸ் நகரில் உள்ள தேவாலயத்திற்கு கல்வி கற்கச் சென்ற இவர், அங்கு கையால் எழுதப்பட்ட புத்தகங்களில் பாடம் கற்றார். அப்போது அங்கிருந்த பாதிரியார்கள் இரவு-பகலாக இருந்து பல வருடங்கள் செலவழித்து வேதாகமத்தை கைகளால் எழுதுவதனைப் பார்த்து வியப்படைந்தார்.

1438 இல் 'ப்ளொக்' அச்சு நிறுவனத்தில் இணைந்து கொண்ட அவர், இரும்பு அச்சுகளிலும் பலகை அச்சுகளிலும் பல பரிசோதனைகளை மேற்கொண்டார். இதன்படி, அச்சுக் கலையை உருவாக்க அவர் திடசங்கற்பம் பூண்டார். நகை உற்பத்தியாளர்களுடன் நெருங்கிய நட்பினைப் பேணியதனூடாக இரும்புத் தொழில் குறித்தும் ஓரளவு அறிவினைப் பெற்றுக் கொண்டார். அதன்பின்னர் சிறிது காலம் பிரான்சில் வசித்து வந்தார். அங்கு அவர் கண்ணாடி உற்பத்தி மற்றும் மாணிக்கக் கற்கள் வெட்டும் தொழிலில் ஈடுபட்டார்.



ஜொஹன்னஸ் அச்சகத்தில் சக ஊழியர்களுடன்

நேரம் கிடைக்கும் போதெல்லாம் அச்சுத் தொழிலின் நுட்பங்களைக் கற்றுக்கொண்டார். 1444 இல் மீண்டும் மேன்ஸ் நகரத்திற்குச் சென்ற ஜொஹன்னஸ், அங்கு இருந்து தாம் அதுவரை கற்ற நுட்பங்களைப் பயன்படுத்தத் தொடங்கினார். தனது மைத்துனனிடம் சிறு தொகையை கடனாகப் பெற்று அச்சகம் ஒன்றை ஆரம்பித்தார். அதன் பயனாக உலக வரலாற்றில் முதல் தடவையாக அச்சு இயந்திரமொன்றை அமைத்து, கைகளால் எழுத்துக்களைக் கோர்த்து, புத்தகம் ஒன்றை அச்சடித்த முன்னோடி என்ற பெருமையை தன்வசப்படுத்திக் கொண்டார்.




பல ஆண்டுகள் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக 1455 இல் 42-Line bible (கட்டன்பேர்க் பைபிள்) என்ற பெயரில் 180 வேதாகம பிரதிகளை அச்சடிக்கும் திறனை அவர் பெற்றார். அதில் ஓவியங்களை வரைவதற்காக ஓவியர்களின் உதவியினை நாடினார். எனினும், தனது கண்டுபிடிப்பினைக் கொண்டு பெரும் வருமானத்தினை ஈட்டும் சந்தர்ப்பம் அவருக்கு கிட்டவில்லை. காரணம், இறுதிக் காலத்தில் அவர் பார்வைப் புலனை இழந்தமையாகும். அதனால், அன்றாட தேவைகளை கூட நிறைவேற்ற முடியாத இயலாமையை கட்டன்பேர்க்கால் சந்திக்க நேர்ந்தது. அச்சுத்துறையின் ஆரம்ப கர்த்தாவாகவும் சிறந்த பொற்கொல்லராகவும் பிரசித்தி பெற்றிருந்த இவர், 1468இல் காலமானார்.

அச்சுத் தொழில்நுட்பத்தில் பெரும் புரட்சியினை மேற்கொண்ட கட்டன்பேர்க்கை நினைவுகூரும் விதத்தில் ஜேர்மனியில் மேன்ஸ் நகரில் 1900 ஆம் ஆண்டு அவரது பெயரிலேயே அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அச்சுக் கலை குறித்த விபரங்கள் அனைத்தையும் கொண்டுள்ள இந்த கட்டன்பேர்க் அருங்காட்சியகத்தினைக் காண பல நாடுகளிலிருந்தும் கடந்த 40 ஆண்டுகளில் 40 லட்சத்திற்கும் அதிகமானோர் வருகை தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 183 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-194) |
|---|---|---|---|---|
| ஐ.மு.ஜகீர், தரம் - 5A, றகுமானியா ம.வித்., மட்டக்களப்பு. | எஃப்.ஷிராஃபா, தரம் - 10, தங்காலை மு.வித்., தங்காலை. | எம்.ஏ.அஸ்பஹான், தரம் - 8, கெகிராவை மு.ம.வித்., அனுராதபுரம். | ந.ஷோபனா, தரம் - 9M, மட்/விபுலானந்தா வித்.,கருவேப்பங்கேணி. | எஃப்.அதாமா, தரம் - 9F, நளீம் ஹாஜியார் ம.கல்., சீனங்கோட்டை. |

**2**

ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுக



**1**

### (A) கணக்குப் புதிர்


நான்கு போத்தல்களில் உள்ள மொத்த டொஃபிகள் 632 ஆகும். மாம்பழச் சுவையுடைய டொஃபிகள் 147. ஸ்ட்ரோபரி சுவை கொண்ட டொஃபிகள் 218 இருந்தன. மாம்பழச் சுவையுடைய டொஃபிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க அதிகமாக 27 டொஃபிகள் அன்னாசிச் சுவையுடைய டொஃபிகளாக உள்ளன. எஞ்சிய டொஃபிகள் கொய்யாப்பழச் சுவையுடையன. நான்கு வகை டொஃபிகளும் வெவ்வேறு போத்தல்களில் அடைக்கப்பட்டுள்ளன.

1. ஒவ்வொரு போத்தலிலும் உள்ள டொஃபிகளின் எண்ணிக்கையை தனித்தனியே காண்க.

| டொஃபிகள் | எண்ணிக்கை |
|---|---|
| .................... | .................... |
| .................... | .................... |
| .................... | .................... |
| .................... | .................... |

2. எத்தனை டொஃபி போத்தல்கள் உள்ளன?
   ............................
3. கொய்யாப்பழச் சுவையுடைய டொஃபி ஒன்றின் விலை .50 சதமாகும். அதில் எல்லா டொஃபிகளையும் வாங்குவதாயின் எவ்வளவு செலவாகும்?
   ............................
4. ஸ்ட்ரோபரி சுவையுடைய எல்லா டொஃபிகளையும் வாங்க 545.00 ரூபா தேவைப்பட்டது. ஆகவே, அதில் ஒரு டொஃபியின் விலை என்ன?
   ............................

### (B) எத்தனை முக்கோணிகள் உள்ளன?






**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.12.17 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 186**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

**3**

அடைப்புக்குள் உள்ள சொற்களை பொருத்தமான இடைவெளியில் நிரப்பினால் சுவாரஸ்யமான தகவல் ஒன்று கிடைக்கும். எழுதுங்கள் பார்க்கலாம்.

*(வட பகுதியில், இவற்றை, 180 கிலோகிராம், கண்ணாடி, தாவரங்களையும், காணப்படும், பழங்களையும், அத்துடன், கண்ணாடிக் கரடிகள், 80-100 கிலோகிராம்)*



தென் அமெரிக்காவில் .............................. ஒரு கரடி இனம்தான் கண்ணாடிக் கரடி. 'அந்தீஸ்' மலையின் .............................. ஈரழிப்புக் கூடிய புல்வெளிக் காடுகளில் இவ்வினக் கரடிகள் வாழ்கின்றன. ஆண்கரடிகள், பெண்கரடிகளிலும் பார்க்க எடை கூடியவை. நன்கு வளர்ந்த ஆண் கரடியின் எடை .............................. ஆக இருக்கும். பெண் கண்ணாடிக் கரடி ஒன்றின் எடை .............................. உடையதாக இருக்கும்.

இவை மரங்களில் விறுவிறுவென ஏறக்கூடியவை. மரங்களிலுள்ள .............................. பறித்துத் தின்னுவதோடு, சில .............................. உணவாகக் கொள்ளும். .............................. சிறிய மான்கள், பெரிய பூச்சிகளும் இவற்றின் விருப்பமான இரைகள் ஆகும்.

.............................. ஏன் .............................. என்று அழைக்கிறார்கள் தெரியுமா? உடல் முழுதும் கறுப்பு நிறத்தில் இருந்தாலும் இவற்றின் நெஞ்சு, கழுத்து மற்றும் முக பகுதிகள் மட்டும் இளம் கபில நிறத்தில் பளிச்சிட்டுத் தெரியும். எனவே, இவற்றைப் பார்க்கும்போது .............................. அணிந்திருப்பது போல தெரிகின்றது. அதனால்தான் இவற்றை 'கண்ணாடிக் கரடிகள்' என்று அழைக்கின்றனர்.

## அறிவுக்கு விருந்து - 183 விடைகள்

**போட்டி: 02**
a) வேலி, fence
b) பீர்க்கங்காய், sponge gourd
c) வாளி, bucket
d) கோடாரி, axe
e) வரைபு, graph
f) இறால், prawn

**போட்டி: 04**
1. செந்தமிழ்
2. நிர்ப்பந்தம்
3. புன்முறுவல்
4. ஆர்ப்பாட்டம்
5. சக்கரவர்த்தி
6. குடியிருப்பு

**போட்டி: 03**
(A)
(i) 5 பந்துகள்
(ii) 39 பந்துகள்

(B)
(i) 4000 மாணவர்கள்
(ii) 3000 சீருடைகள்
(iii) 7000மாணவர்கள் (கடந்த ஆண்டு - 4000மாணவர்கள், இவ்வாண்டு - 3000 மாணவர்கள்)

### இணைக்க **4**

| நாடு | தலைநகரம் | நாணயம் |
|---|---|---|
| 1. ஹங்கேரி | 1. தெஹ்ரான் | 1. ஃபொரின்ட் |
| 2. டென்மார்க் | 2. கொபன்ஹகென் | 2. டினார் |
| 3. ஜோர்தான் | 3. புடாபெஸ்ட் | 3. ரியால் |
| 4. ஈரான் | 4. அம்மான் | 4. டெனிஷ் க்ரோன் |

### போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.197 **5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | ■ |
| ■ | 4 | | ■ | ■ | 5 |
| 6 | | ■ | 7 ந் | ■ | |
| 8 | | 9 | | | ■ |
| 10 | | | | ■ | 11 |
| | ■ | | ■ | 12 | |

**மேலிருந்து கீழ்**

02. உடல் ஆரோக்கியத்தை சிறப்பாகப் பேணுவதற்கு உகந்த வழிமுறையை குறித்து நிற்பது.
03. 'இன்று' என்பதற்கு அடுத்த நாள்.
05. பனை, தென்னை என்பனவற்றின் இலைக்கு வழங்கப்படும் சொல்.
06. ஏற்றத்தாழ்வு அற்ற நிலை.
07. தபால் சேவையுடன் தொடர்புடையதாக விரைவாக வழங்கப்படும் செய்தி. (குழம்பி)
09. விவசாயம்-ஒத்தகருத்துச் சொல்.
11. கொடிய மீனினம்.

**இடமிருந்து வலம்**

01. டிசம்பர் 25 ஆம் திகதி கிறிஸ்தவ மக்களால் இவரது பிறந்த தினத்தையொட்டி 'கிறிஸ்மஸ் தினம்' கொண்டாடப்படுகிறது.
04. மாட்டின் ஆண் இனம்.
06. எப்பொழுதும்/எந்நேரமும் என்று பொருள்படும்.
08. விலை உயர்ந்த இரத்தினக்கல் வகையொன்று.
10. மன அமைதி என்றும் சொல்லலாம்.
12. சமாதானத்துக்கான சர்வதேச குறியீடு.

### குறுக்கெழுத்துப்போட்டி 194 விடைகள்

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 01. மந்தை | 05. ஒளியாண்டு | 10. மகா |
| 02. மோதல் | 07. யவணர் | |
| 03. கடை | 08. பாகு | |

**இடமிருந்து வலம்**

| | |
|---|---|
| 01. மன்மோகன் | 09. கயா |
| 04. தடை | 10. மணம் |
| 06. தையல் | 11. கார் |
| 08. பாளி | 12. மொட்டு |

**குறுக்கெழுத்துப் போட்டி -197**
**"விஜய்"**
**த.பெ.எண். 2037**
**கொழும்பு**

### பாராட்டுப் பெறுவோர்

எம்.மர்ஸான், தரம் - 10A, அந்-நூர் தே.பாட., வாழைச்சேனை.

எஸ்.தினேஸ்குமார், தரம் - 12கலை, ஸ்ரீ கோரக்கர் த.ம.வித்., சம்மாந்துறை.

யோ.கிஷானி, தரம் - 13, கோளாவில் வி.ம.வித்., அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கங்காருவிற்கும் மனிதனுக்னும் இடையே மரபணு ஒற்றுமை கண்டுபிடிப்பு

குரங்கின் பரிணாம வளர்ச்சியே மனிதன் என்று கருதப்படுகின்ற நிலையில், தற்போது மற்றுமொரு புதிய உறவுமுறையும் மனிதனுடன் இணைத்து முடிச்சுப் போடப்பட்டுள்ளது. அதாவது, கங்காரு இனத்திற்கும் மனிதனுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிப்பதாக குறிப்பிடப்படுகின்றது. எனவே, இந்த கங்காரு இனமானது மனிதனின் மூதாதையராக இருக்கலாம் என்றும் மேற்படி ஆராய்ச்சிகள் மூலம் ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அனுசரணையின்கீழ் இயங்குகின்ற 'எக்ஸலன்ஸ்ஃபோ கெங்கரு ஜெனோமிக்ஸ்' என்ற ஆராய்ச்சி நிலையமே இந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த ஆராய்ச்சிகளுக்கமைய கங்காருவின் மரபணுவையும் மனிதனின் மரபணுவையும் ஒப்பிட்டு ஆராச்சி செய்யப்பட்டதில் அவை ஒன்றுக்கொன்று பொருந்துவது தெரியவந்துள்ளது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட மேலதிக ஆராய்ச்சிகளின்படி இந்த பரிணாம வளர்ச்சியானது முதன்முதலாக சீனாவில்தான் ஆரம்பமாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

**கங்காருக்கள் மனிதனின் மூதாதையர்களாகவும் இருந்திருக்கலாமாம்...!**

மேற்படி ஆராய்ச்சி நிலையத்தின் தலைவரான ஜெனீகிரேவிஸ் என்பவர் தெரிவிக்கின்ற கருத்துக்களின்படி, தாம் கங்காருக்களின் மரபணுவுடன், மனிதனின் மரபணுவை சேர்த்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டதாகவும் உண்மையில் ஒருசில வேறுபாடுகளைத் தவிர அதிகமான ஒற்றுமைகளையே இந்த மரபணுக்களுக்கிடையே காண முடிந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

பொதுவாக கங்காருக்கள் நாற்திசைகளிலும் கண்டபடி ஓடித்திரிவனவாயினும் அவை மனிதனைப் போலவே இரண்டு கால்களால் நிற்பதைக் காணலாம். 150 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் கங்காருக்கள் மனிதனின் மூதாதையர்களாக வாழ்ந்துள்ளதாக இந்த ஆராய்ச்சிகளின் மூலம் தெரியவந்துள்ளது.

மனிதனுக்கும் எலிகளுக்குமிடையே உடல் அவய தொடர்புகளில் காணப்பட்ட 70 மில்லியன் காலத்துக்கும் முன்னதான தொடர்பாகவே கங்காரு, மனிதர்களுக்கிடையேயான தொடர்புகள் இருப்பது தெரியவந்துள்ளது.

சீனாவில் ஆரம்பித்த கங்காருக்களின் பரிணாம வளர்ச்சியானது அமெரிக்காவினூடாக அவுஸ்திரேலியாவிற்குள் பரவியதாகவும் கூறப்படுகின்றது. ஆக, கங்காருக்களுக்கும் மனிதனுக்குமிடையிலான இந்த ஒற்றுமைகள் குறித்தான ஆராய்ச்சிகள் மேற்கொண்டும் நடைபெற்று வருகின்றன.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, டிசம்பர் மாதம் 10ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 10, 2008.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org